

# ஞானச்சுடர்

மாசி

மலர் 2007



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



உ

# குறள்வழி

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து

**பொருள்:** குன்றிமணியின் மேற்புறம்போல வேடத்தாற் செம்மையுடையவராய்க் காணப்படினும் மனதிலே குன்றிமணியின் மூக்குப்போல் கறுத்திருப்பவர் இவ்வுலகத்திவுளர். (277)



## நற்சிந்தனை

### திருவம்மானை - 1

### ஐயடித்தரவு கொச்சகக் கலிப்பா

வேதம் வகுத்தானை வேதத்தி னுட்பொருளைப்
பாதுந் தொழுவார்கள் பாக்கியத்தைப் பச்சைமால்
பேதந் தவிர்த்தாண்ட பிஞ்ஞகனைப் பிறப்பிலியை
மாதவி புன்னைமௌவல் வளர்ந்தோங்கு நல்லூரில்
பாதம் பரவிநாம் பாடுதுங்கா ணம்மானாய்

உயிருக் குயிராகி யுள்குவா ருள்ளத்தே
பயிலுந் திருவுருவைப் பற்றற்றார்க் குறுதுணையைக்
கயிலைப் பதியானைக் காளகண்டங் கொண்டவனை
மயிலைப் பொருவுமையாள் மருவுதிருப் பாதியனைத்
துயிலை யறநீக்கித் தோத்திரிப்போ மம்மானாய்

உ

# ஞானச்சுடர்

வெளியீடு – 2 சுடர் – 110

## 2007 மாசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பாம்பன் சுவாமிகளும் முருக...... | த. நாகராசா B.A | 1 - 3 |
| அருணகிரிசுவாமிகள் திருப்புகழும்.. | S.S. ரஜீந்திரன் | 4 - 6 |
| பகையும் நட்பும் | கா. கணேசதாசன் | 7 - 8 |
| சந்திரன் சாபம் சாடிய சங்கரன் | சிவ சண்முகவடிவேல் | 9 -12 |
| மானுடரின் ஆன்மஈடேற்றம் | நா. சந்திரலீலா | 13 - 17 |
| முன்னோர் சொன்ன கதைகள் | சி. யோகேஸ்வரி | 18 - 19 |
| மாணிக்க(ர்) மாலை | முருகவே பரமநாதன் | 20 - 22 |
| பார் முழுதும் போற்றும் பரம..... | சி. சிவமோகன் | 23 - 25 |
| தவமுனிவனின் தமிழ்மந்திரம் | சிவமகாலிங்கம் | 26 - 30 |
| மனித ஆளுமையில் இசையின்.... | செல்வி ச. சரவணமுத்து | 31 - 34 |
| அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் | செல்வி தி. வரதவாணி | 35 - 37 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 38 - 42 |



**அன்பளிப்பு:~**

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021- 2263406

பதிவு இல. Q.D./44/NEWS/2007

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

உ

# ஞானச்சுடர்

# தைமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடரின் பத்தாவது ஆண்டின் முதலாவது மலரை திரு ஆறுதிருமுருகன் அவர்கள் மங்களகரமாக வெளியீடு செய்து வைத்தார்கள்.

சூரியன் தவறாது தனது கடமையைச் செய்து தினமும் பிரகாசிப்பது போல ஞானச்சுடரும் கடந்த ஒன்பது வருடங்களாக மாதம்தோறும் பிரகாசித்து தற்பொழுது பத்தாவது வருடமும் பிரகாசிக்கத் தொடங்கியிருப்பது சாதாரண ஒரு காரியம் அல்ல என்பதை திரு ஆறுதிருமுருகன் அவர்கள் சபையினருக்கு எடுத்துக்காட்டினார்கள்.

1998ஆம் ஆண்டு சிறிய அளவில் ஆரம்பித்த ஞானச்சுடர் சஞ்சிகையின் செயற்பாடு இன்று உலகம் முழுவதும் பிரகாசிக்கும் நிலைக்கு வளர்ந்துள்ளதையும் சபையினருக்கு சுட்டிக்காட்டினார்கள். கனடாவிலிருந்து வெளிவரும் சமயசஞ்சிகைகள் ஞானச்சுடரில் வரும் கட்டுரைகளை வெளியீடு செய்தல் லண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் முதியோர் ஞானச்சுடரை விரும்பி வாசித்தல் போன்ற உதாரணங்களையும் எடுத்துக்காட்டினார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக புத்தகப்பிரசவம் என்ற இந்த ஒப்பற்ற வேலையை அன்னதானச் செயற்பாடுகளின் மத்தியிலும் ஏனைய சமூகசேவைகள் சமயசேவைகள் மத்தியிலும் மேற்கொள்வதற்கு திருவருட்கடாட்சம் காரணம் என்பதையும் குறிப்பிட்டார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

மலருக்கான மதிப்பீட்டுரையை யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை அதிபர் திரு ஆ. சிவநாதன் அவர்கள் மேற்கொண்டார்கள். பொதுவாக ஆச்சிரமம், பேரவை செய்கின்ற பணிகளில் ஒரு பணியைக்கூட எங்களால் செய்யமுடியாது என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என திரு சிவநாதன் அவர்கள் தனது ஆரம்ப உரையில் குறிப்பிட்டு இதில் திருவருள் துணையாக இருப்பதையும் வெளிப்படுத்தினார்கள்.

இங்கே இடம்பெறும் பணிகளில் ஞானச்சுடர் வெளியீடே தலையாய பணியாக இருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள். சாதாரணமாக வெள்ளிநிகழ்வு நடக்கும்பொழுது அதில் பங்குபற்றுபவர்களே பயனடைவார்கள் ஆனால் ஞானச்சுடரில் வெளிவரும் கருத்துக்கள் உலகம் முழுவதும் உள்ள அன்பர்களை சென்றடைகின்றது எனவும் குறிப்பிட்டார்கள். அதுமட்டுமல்ல ஞானச்சுடர் செல்லும் இடங்களில் எல்லாம் அவர்கள் சந்நிதியானை நினைப்பதற்கும் வணங்குவதற்கும் ஒரு காரணமாக இது விளங்கி வருவதையும் எடுத்துக்காட்டினார்கள்.

2007ஆம் ஆண்டு தைமாத மலரில் இடம்பெற்ற கட்டுரைகளில் உள்ள ஆழமான கருத்துக்களை அடியார்களுக்கு இரத்தினச்சுருக்கமாக எடுத்துக்கூறி எமது சமயம் தொடர்பான நலிவுகளை நீக்கும் வகையில் ஞானச்சுடர் வெளிவந்து கொண்டிருப்பதையும் பாராட்டி தனது மதிப்புரையை அதிபர் சிவநாதன் அவர்கள் நிறைவுசெய்தார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

## திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர்சபை

**மேன்மைமிகு, புலம்பெயர் நாடுகளிலுள்ள இந்து நிறுவனங்கள்,சிவநேயச் செல்வர்களே! இலங்கைவாழ் அன்பர்களே!வள்ளல்களே! அபிமானிகளே!**

**பணிவான வணக்கம்.**

**விடயம்:- ஈழத்திலுள்ள திருக்கேதீச்சரத்தில் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் ஞாபகார்த்தமாகத் திருமடம் ஒன்றினைப் புதிதாக நிர்மாணிப்பதற்கான நிதிகோரும் விண்ணப்பம்.**

'திருவாசகம்' எனும் மணிவாசகத்தின் மகத்துவத்தைத் தமது ஞானானுபவத்தின் தலச்சுவையுடன் விளக்கி உபதேசித்துரைக்கும் மிகவுயர்ந்த குறிக்கோளுடன் திருக்கேதீச்சரத்திலே திருமடத்தினை ஸ்ரீமத் சபாரத்தினசுவாமிகள் கல்லும், மண்ணும் மரங்களும் சுமந்து வந்து அமைத்ததும், சுண்ணாம்பினால் 'திருவாசகமடம்' எனப் பெயரிட்டும் நிறுவினார் என்பது சைவத்தமிழ் உலகறிந்த உண்மை விடயமாகும். பிற்காலத்தில் ஸ்ரீ சி. சரவணமுத்து அடிகளார் திருவாசக மடத்தை நிர்வகித்ததும் உண்மையே. கால முதன்மையினடிப்படையில் முன்னதாகவே கிழக்குவீதியில் அமைத்த மடத்திலேயே ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் இருந்து செய்த மகத்தான நற்பணிகளை அனைவரும் நன்கறிவர். நெசவுசாலை, கௌரீசர் பாடசாலை, நன்னீர்க்கிணறு என்பனவற்றை சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களின் உதவியோடு நிறைவேற்றியுள்ளார். திருக்கேதீச்சரத்துக்கு யாத்திரிகர்களாய் வரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் முன்னின்று செய்தார் திருக்கேதீச்சரத் தேவஸ்தானத்துத் திருப்பணிச்சபையினர் திருக்கோயிலின் தெற்குவீதிக்கு அண்மையில் புதியதோர் திருமடத்தினை நிர்மாணிப்பதற்கான காணித்துண்டை எமது சபைக்கு ஒதுக்கித்தந்துள்ளார்கள். திருக்கேதீச்சரத்திலே ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் ஏற்கனவே இரு திருமடங்களை ஸ்தாபித்துத் திருப்பணிகள் பல புரிந்தவர். முன்னோடித் திருப்பணிகளை நினைத்து கௌரவித்து பூசை, பிரார்த்தனை, சமய நிகழ்ச்சிகளைச் செய்வதற்கும், யாத்திரிகர்களாக வருவோர் தங்கி நிற்பதற்கும் அடிப்படை வசதிகளுடன் கூடிய அறைகள் சிலவற்றுடனும், கதாப்பிரசங்கம், திருநெறிப்பணிச்சபை அரங்குகள், பஜனைகள், கூட்டுப்பிரார்த்தனைகள், தியானம் என்பன நடத்துவதற்கான சகல வசதிகளுடனும் கூடிய கலாசாரமண்டபம் ஒன்றினையும் அமைப்பதற்கு எமது தொண்டர்சபை முன்வந்துள்ளது. இத்தகு மேதகு திட்டங்களுடன் முன்னேற்பாடான ஒழுங்குகளைச் செய்துள்ளோம்.

இந்த மாபெரும் சிவகைங்கரியம் சாத்தியமாக நிறைவேற்றுவதற்குச் சிவநேயச் செல்வர்களிடமிருந்தும், ஆர்வலர்களிடமிருந்தும் இயன்ற நிதியுதவியைப் பெற்று செயற்பட வேண்டும் என்றும் கருதுகின்றோம். இதற்கான உதவிகளைத் தரவிரும்புவோர் மேற்குறிப்பிட்ட தலைவர் அல்லது செயலாளரின் முகவரிக்கு திருவாசகம் சிறிமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர்சபை HNB A/C 0390381751CU பம்பலப்பிட்டி கிளையிலுள்ள வங்கிக்கணக்கிற்கோ அனுப்பிவைத்தால் பற்றுச்சீட்டு அனுப்பிவைக்கப்படும். புதியதோர் திருமடத்தை நிர்மாணிப்பதற்கான மதிப்பீடுச் செலவு ஐம்பது இலட்சம் (50 இலட்சம்) ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

**குறிப்பு, 3 இலட்சம் ரூபாவை (இலங்கை நாணயப்படி) நன்கொடையாக வழங்குபவரது அல்லது அவர் விரும்பும் ஒருவருடைய பெயர் அன்னாரின் நிழல்படம் திருமடத்தில் அமையவுள்ள அறைகள் ஒன்றில் பொறிக்கப்படும். விரும்பியவர்கள் (முன்னதாகவே பெயர் விபரங்கள்) அறியத்தரவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**புதிதாக நிர்மாணிக்கப்படும் திருப்பணி வேலைகள் பூர்த்தியானதும் உதவியவர்கள் பெயர், விபரம், கட்டிட வரவு செலவுகள் அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்படும் என்று உறுதியளிக்கிறோம்.**

வணக்கம்

த. துரைராசா (செயலாளர்)

சி. தியாகராசா (S.T.R) தலைவர்

ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபை

உ

# சந்நிதியானை நம்புங்கள் அவன் எங்களைக் கைவிடான் காப்பான்

செந்தமிழ் பேசும் சிறப்பின் மேவிய
தெய்வச் சீரடி யார்களே
இந்த நாளிலே நாங்கள் பட்டிடும்
இடரெ லாம்நன்கு நோக் குவீர்
வந்தனை செய்து செல்வச் சந்நிதி
வரதன்பாற் சென்று முறையிடின்
அந்தத் தீவினை யாவு மேகிட
அன்னவன் வழி செய்வனே

தேவரும் அவர் கோனும் அற்றைநாள்
திகைப்ப டைந்திடச் செய்த, அத்
தீய ராய் அசுரர் தங்களைச்
செற்றவன் செல்வன் சண்முகன்
யாவரும் போற்றும் செல்வச் சந்நிதி
இனிது வீற்றிருக் கின்றனன்
தேவ னெங்களைக் கைவிடானிது
திண்ண மென்ப துணர்வீரே

அன்ன வனன்று சொன்ன சொற்படி
அரியதா மந்தக் கோயிலில்
இன்ன முமையர் வாயைக் கட்டியே
ஏத்திப் பூசையைச் செய்கிறார்
கன்ன லைக்கனி யான கந்தனார்
கற்பித்தபடி மேற்கொண்டு
அன்ன தானமாம் பணி சந்நிதியுயர்
ஆச்சிரமத்தார் செய்கிறார்.

*முதுபெரும்புலவர்,*
*கலாபூசணம், ஆசிரியர்*
*வை.க. சிற்றம்பலவனார்.*

உ

# பாம்பன்சுவாமிகளும் முருகவழிபாடும்

*திரு த. நாகராசா* B.A *அவர்கள்*

பாரததேசத்திலும் ஈழநாட்டிலும் பல்வேறு ஞானியர்கள் வாழ்ந்து மக்களின் இடர்களைத் தீர்த்து மக்களின் வாழ்க்கை யினை வளம் பெறச் செய்தனர். பல்லவர் காலத்தில் தமிழ்நாட்டில் பதினெண் சித்தர் கள் வாழ்ந்து மக்களுக்காக அளப்பரிய சேவையினைச் செய்துள்ளார்கள். இவர் களைப் போலவே தமிழ்நாட்டில் பாம்பன் என்ற இடத்தில் தோன்றிய பாம்பன் சுவாமி கள் முருகன் அருள்பெற்று மக்கள் வாழ்க் கையின் இடர் களைந்து ஜீவகாருண்ய நெறியினை மக்களிடத்தே வளர்த்து வந்த ஞானியாவார்.

முதலாவதாக பாம்பன் சுவாமிகள் துறவுநிலை மேற்கொண்டபோது "பல் குன்றிலும் அமர்ந்த பெருமாளே" என்ற அருணகிரிநாதரின் வாக்கிற்கிணங்க முருகன் வீற்றிருக்கும் பல்வேறு தலங் களை வழிபட்டு வந்தார். ஆரம்ப காலத் திலும் இறுதிக் காலத்திலும் அவரின் வழிபாடு முருக தலங்களை அண்டிய தாகவே இருந்தது. அவர் முருகன் மீது பல்வேறு பதிகங்களைப் பாடியுள்ளார். அவற்றுள் முக்கியமானது திருநெல்வேலி யிலுள்ள நெல்லையப்பர் பதிகமாகும். இக் கோயிலில் அளவு கடந்தபக்தி கொண் டிருந்தமை காரணமாக பத்து நெல்லை யப்பர் பதிகங்களைப் பாடியுள்ளார் இப்பதி கங்கள் யாவும் முருகனின் அருளாட்சி யினை எடுத்துக் காட்டுவனவாயுள்ளன. தேவராயசுவாமிகள் அருளிச்செய்த கந்த சஷ்டி கவசம் போலவே சண்முக கவ சத்தை இயற்றிப் பாடியுள்ளார். இக்கவ சத்தில் முருகனடியார்களின் அங்கங்களை முருகன் காக்கும்படி பாடியுள்ளார். அவற் றிற்கு உதாரணமாக ஒருபாடலை இங்கே குறிப்பிடலாம்.

அண்டமாய் அவனியாகி அறியொணாப் பொருளதாகித்
தொண்டர்கள் குருவுமாகித்துகளறு தெய்வமாகி
எண்திசை போற்றநின்ற என்னருள் ஈசனான
திண்திறல் சரவணத்தான் தினமும் என் சிரசைக்காக்க

என்ற பாடலுடன் சண்முககவசம் இவரால் ஆரம்பிக்கப்பட்டு தனிமையில் கூட்டம் தன்னில் சரவணபவனார் காக்க என்ற பாடலுடன் முடிக்கின்றார். இவர் பாடிய முப்பது பாடல்களிலும் சிரசினை முருகன் காக்கவேண்டுமென்று ஆரம் பித்துத் தொடர்ந்து நாசியை நயந்து காத்தல் பிடரியைக் காத்தல் முழங்கை தனைக் காத்தல் என்று தொடர்ந்து பாடி யவர் தனிமையில் கூட்டம் தன்னில் சர வணபவனார் காக்க என்ற பாடலுடன் முடிக்கின்றார். இப்பாடல்கள் யாவும் முருகன் அடியார்களைக் கந்தக்கடவுள் காக்க வேண்டுமென்ற மாருத ஈடுபாடு கொண்டு பாடியுள்ளார். மேற்குறிப்பிட்ட 30 பாடல்களைப் படிப்பவர்கள் பல்வளமும், ஆரோக்கியமும் முருகனின் கடாட்சமும் பெறுவார்களென்று குறிப்பிட்டுள்ளார்

கந்தசஷ்டி கவசம்போல ஆறுமுககவச மும் தெய்வீகம் வாய்ந்தகவசம் என்பதை இதை ஓதுபவர்கள் அறிவார்கள்.

பாம்பன் சுவாமிகள் சிறந்த முருக பக்தர் மட்டுமன்றி ஜீவகாருண்யம் படைத்த மகானாகவும் வாழ்ந்தார் உயிர்க் கொலை யினை முற்றவே வெறுத்தார் ஒரு நாள் சித்தரசையன் என்ற கிராமத்தில், ஓர் முருகபக்தர் வீட்டில் உணவு உண்பதற் காகச் சென்றவர் உணவு உண்ணப் போகும் சமயத்தில் அந்த வீட்டுக்காரனின் மகன் மூட்டுப் பூச்சியினைக் கொன்றதற் காக உணவு உண்ணமறுத்து இந்த வீட்டில் “இழவு” நடந்து விட்டது எனவே உண்ணமாட்டேன் என்று கூறியதுடன் மூட்டுப் பூச்சியினைக் கொன்ற வீட்டுக்காரப் பையனைக் கடிந்து உயிர்க்கொலை செய்வதைத் தவிர்க்கும்படி கூறியதுடன் கடவுளால் படைக்கப்பட்ட எந்த உயிரை யும் கொல்ல மனிதராகிய எங்களுக்கு உரிமையில்லை அவன் படைத்தான் அவனே அவ்வுயிரை எடுப்பான் எனக் கூறி னார். இவரது கூற்றைப் பார்க்கின்ற பொழுது ஐயறிவு படைத்த உயிர்களைக் கூடக்கொல்ல எங்களுக்கு உரிமை யில்லை என்பது தெரியவருகின்றது. மேலும் பாம்பன் சுவாமிகள் உணவு உண் ணாத நிலையினைக்கண்ட அடியார் மனம் வருந்தி இரங்கிக் கேட்டதனால் இரவு பால் மாத்திரம் அருந்தினார். அடுத்த நாளே உணவு உட்கொண்டார். யாழ்ப்பாணத்தில், வாழ்ந்த சித்தரான கடையிற் சுவாமியார் கூட கேரளத்தில் நீதிபதியாக இருந்த பொழுது கொலைக்குற்றம் சாட்டப்பட்ட ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்க மறுத்தார். மனிதனால் படைக்கப்பட்ட மனித உயிரைக் கொல்லும்படி கட்டளை யிடுவதற்கு நான் யார்? என்று கூறியவ ராய்த் தனது நீதிபதிப் பதவியினை இராஜி னாமா செய்துவிட்டு யாழ்ப்பாணம் வந்து எல்லோருக்கும் வழிகாட்டும் ஞானியானார். எனவே அவரது கொள்கை உயிர்கள் மீது ஜீவகாருண்யம் காட்டவேண்டும் என்ப தாகும். ஆனால் பாம்பன் சுவாமிகள் ஐய றிவு படைத்த உயிர்கள் தொட்டு ஆறறிவு படைத்த உயிர்கள் வரை கருணை காட்ட வேண்டும். எல்லாவற்றையும் படைத்துக் காத்து அழித்தல் இறைவனது அருளாகு மென விபரித்துள்ளார். இதன் மூலம் ஞானி யர்கள் எமக்கு உணர்த்துவது என்ன வெனில் உயிர்களைப் பிறர்கொல்லல் அல்லது தன்னைத்தானே அழித்தல் அல்லது தற்கொலை செய்வது மிகப் பெரிய பாதகம் என்பதுடன் உயிர்க் கொலையை இறைவன் ஏற்கமாட்டான் என்பதனையும் எங்களுக்கு எடுத்துக் காட்டுகின்றார். எனவே வள்ளுவப் பெரு மான் சொல்லிய

கொல்லான் புலாலைமறுத்தானைக் கை கூப்பி
எல்லாஉயிரும் தொழும்

என்ற குறள் ஞாபகத்திற்கு வருகின்றது.

நடைமுறை வாழ்க்கையில் இந்துக் களாகிய நாங்கள் இவற்றைக் கடைப் பிடிப்பது மிகவும் குறைவாகக் காணப் படுவது கவலைக்குரியதாகும். நோன்புக் காலங்களில் அல்லது திருவிழாக் காலத் தில் உயிர்செகுத்து உண்ணாது நோன்பு முடிந்த மறுநாளோ அல்லது திருவிழா முடிவுற்றதும் உயிர்செகுத்து உண்கின்றார்

**சரியானதும் நல்லதுமானது – புண்ணியம்.**

கள். சைவர்களாகிய நாங்கள் புலாலை உண்ணமறுத்து வாழ்தல் மிக வேண்டப் படுவதாகும். ஆனால் எங்களது இந்துமதம் எதைச் சொல்லிற்றோ அதைக் கடைப் பிடித்து இந்துக்களாகிய நாங்கள் வாழ்வ தில்லை. எங்களது மதக் கோட்பாட்டினை பின்பற்றினால்தான் இம்மதம் வளர்ச்சிய டையும் ஏனைய மதத்தோர் போற்றவும் செய்வார்கள். ஞானியர்கள் பொதுவாக உயிர்க் கொலையை வெறுக்கின்றார்கள். பிற உயிர்களைக்கொன்று உண்ணலை கண்டிக்கின்றார்கள். பகவான் சத்திய சாயி பாபா அடிக்கடி இதை வலியுறுத்தி வருவ தைக் காணக்கூடியதாயுள்ளது. எனவே, பொதுப்படையாகப் பார்க்கின்றபொழுது சங்ககாலத்தில் சிறப்புற்றோங்கியிருந்த முருகவழிபாடு சங்கமருவிய காலத்தில் ஆரியர் வருகையினால் தளர்வுற்றது. மீண்டும் (17ஆம் நூற்றாண்டில்) அருண கிரியார் இவ்வழிபாட்டினை வளர்ச்சியடை யச் செய்தார் அதன் பின்பு கலியுகவரத னாகிய கந்தவேளின் வழிபாடு பல்வேறு ஞானியர்களால் தமிழ் நாட்டிலும் ஈழத் திலும் வளர்ச்சியுற்றுவருகின்றது. இவ்வழி பாட்டில் பாம்பன்சுவாமிகள் முருகவழிபாட் டுடன் ஜீவகாருண்ய நெறியினையும் இணைத்து மக்களுக்கு வாழ்ந்து காட்டி னார். எனவே பாம்பன் சுவாமிகள் வழி காட்டிய ஜீவகாருண்யக் கோட்பாட்டினை முருக வழிபாட்டுடன் இணைத்து வாழ் வோமாக.

---

பகலும் இரவும் சேர்ந்துதான் ஒரு நாள். நமக்குப் பகலும் வேண்டும், இரவும் வேண்டும். பகலிலே நமக்கு வேண்டிய உணவுக்காகவும் உடைக்காகவும் வேலை செய்கிறோம், பாடுபடுகிறோம், சம்பாதிக்கிறோம். கடைசியிலே களைத்துப் போய்ச் சோர்ந்து விடுகிறோம். இரவிலே களைப்பு, சோர்வு எல்லாம் போக்குதற்காகப் படுத்து உறங்கிவிடுகிறோம். எழுந்திருக்கும் போது தெம்போடு எழுகிறோம். அதனால் நமக்குப் பகலும்வேண்டும், இரவும் வேண்டும். இதிலிருந்து என்ன தெரிகிறது? வெளிச்சம் தோன்றியபோதே இருட்டும் தோன்றிவிட்டது. இரண்டும் நமக்குவேண்டும். இருட்டிற் பயமாக இருக்கிறதே என்றால் அதற்காக இருட்டே வேண்டாம் என்று சொல்ல முடியுமா? வெளிச்சமிருந்தால் தூக்கமே வராது அதனால் தூக்கம் வேண்டும். இரவும் வேண்டும்

நிழலில் இருக்கும் ஒருவனுக்கு நிழலின் அருமை தெரியுமா? வெயிலில் போய்விட்டு வந்தவனுக்குத்தான் நிழலின் அருமை தெரியும். அது போலத்தான் வாழ்க்கையும் வாழ்க்கையில் சுகத்தின் அருமை தெரிவதற்காக நடு நடுவே சற்றே துக்கத்தையும் கொடுக்கிறார் இறைவன். துக்கம் வரும் போதுதான் நமக்கு உண்மை விளங்குகிறது. கஷ்டத்தைக் கொடுத்து "இறைவன் நம்மைச் சோதனை செய்கிறார். சோதனைவரும் போது நாம் கலங்கக்கூடாது எல்லாம் இறைவன் செயல் என்று அவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு நாம் நம் கடமையைச் சரியாகச் செய்தால் வரும் சோதனைகளெல்லாம் சாதனைகளாகிவிடும்.

தீயதும் தவறானதுமானது – பாவம்.

உ

# அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழும் கிருபானந்தவாரியார் பொருளுரையும்

*திரு S.S. றஜீந்திரன் அவர்கள்*

**கதிர்காமம்**

ஈழத்திருநாட்டில் உள்ள முருகன் ஆலயங்களான மாவிட்டபுரம், செல்வச் சந்நிதி, கதிர்காமம், நல்லூர், மண்டூர் ஆகியவற்றுள் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் புராண வரலாற்றில் உயர்ந்த இடத்தைப் பெறுவது கதிர்காமம் எனும் திருத்தலமே. கதிர்காமம் என்ற பெயருக்கான பொருள் இன்னும் அறியப் படாத ஒன்றாகவே உள்ளது. ஆய்வாளர் களும் சுவாமிகளும் பல கருத்துக்களைக் கூறுகிறார்கள். ஆனால், புராண வரலாற் றின்படி கதிர் - ஒளி, காமம் - அன்பு எனும் பொருளில் முருகனின் அன்பு எனும் ஒளி நிறைந்த இடம் என்று பொருள் பெறுகிறது.

புராணங்களிலும் சரித்திர நூல் களிலும் தோத்திரத் திரட்டுக்களிலும் கதிர் காமத்திற்கு ஏமகூடம், பூலோககந்தபுரி, காரிகாப்பு, வரபுரி, பஞ்சமூர்த்திவாசம், வில்வகானகம், சகலசித்திகரம், அகத் தீயப்பிரியம், பிரமசித்தி, அவ்வியர்த்த மூர்த்தம், சித்தகேத்திரம், கதிரை, ஜோதிஸ்காமம் என்றபெயர்களுண்டு கதிர் காமக் கந்தனைக் கதிர்காமசுவாமி, கதிரைநாயகன், கதிரைவேலன், மாணிக்க சுவாமி,கந்தக்கடவுள், ஆறுமுகப்பெருமான், பரஞ்சோதிப்பெருமாள், சிதாகாயநாதன், அவ்வியர்த்தமூர்த்தி எனவும் போற்றப் படுகின்றார். (ஓயா என்பது மாணிக்க கங்கை)

கதிர்காமத் தலமானது தீயனகம எனும் காட்டில் மாணிக்க கங்கையின் இடதுகரையில் அமைந்துள்ளது. திசமஹா ராமாவிலிருந்து 11மைல் தூரத்தில் அமைந் துள்ளது.

கதிர்காமத்தில் பெரிய கோபுரத் தையோ விமானத்தையோ காணமுடியாது. கர்ப்பக்கிருகமும் சிறு மண்டபமும் கொண் டதே கோயிலாகும். கர்ப்பக்கிருகத்தின் வாசலில் திரையிடப்பட்டிருக்கும். அடியார் கள் வெளிமண்டபத்திலிருந்தே வழிபடு வார்கள். வேலவருக்குப் பூசை செய்யும் கப்புறாளைமார்கள் தமது வாயை மஞ்சள் நிறத்துணியினால் கட்டி அமுதினை உள்ளே வைத்துவிட்டுத் திரைச்சீலை முன் பாக நின்று பூசை செய்வார்கள். கோயிலில் பணிபுரிவதற்கு மேளகாரர், ஆலாத்திப் பெண்கள், ஜோதிடர் ஆகியோர் உளர்.

கதிர்காமத்தில்

1. சித்திரை வருடப் பெருவிழா
2. ஆனியில் பந்தர் காற் பெருவிழா
3. ஆடிமாத வருடாந்த மகோற்சவமும் தீர்த்தத் திருவிழாவும்
4. திருக்கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழா ஆகியன சிறப்பாக நடைபெறுகின்றன.

கதிர்காமத் திருத்தலம் பற்றி யாழ்ப்பாண வைபவமாலையிலும் மகா வம்சம் என்ற நூலிலும் கூறப்பட்டுள்ளது.

சிகண்டி முனிவர் என்னும் மிகச் சிறந்த முனிவர் அக்காலத்திலே இசை நுணுக்கம் என்னும் நூலை இயற்றியவர். அவர் கதிர்காமத்தலத்திற்கு ஏகும் காலத்திலே மதயானை ஒன்று எதிர்ப்படவே அருகிலிருந்த வெற்றிலையைக் கிள்ளி எறிய அது வேலாகி யானையைக் கொன்றது. என்னே! கதிர்காமக் கந்தன் கிருபை!

இத்தகைய சிறப்புப் பொருந்திய கந்தனைக் கீழ்வரும் பாடலில் பின்வருமாறு வேண்டுகிறார் அருணகிரிநாதப் பெருமான். "கதிர்காமக் கந்தனே, பொது மாதர்களின் வசமாகி அவர்களுக்காகப் பொருள் தேடாமலும் மனிதரைப் புகழ்ந்து பாடாமலும் இருப்பதற்கு அருள் புரியவேண்டும்."

**பாடல்**

அலகின் மாறு மாறாத கலதி பூதவேதாளி
அடைவில் ஞாளி கோமாளி அறமீயா
அழிவு கோளி நாணாது புனுகு பூசி வாழ்மாதர்
அருளி லாத தோடோய மருளாகிப்

பலக லாக ராமேரு மலைக ராச லாவீசு
பருவ மேக மேதாரு வெனயாதும்
பரிவு றாத மாபாதர் வரிசை பாடி யோயாத
பரிசில் தேடி மாயாத படிபாராய்

இலகு வேலை நீள்வாடை யெரிகொள் வேலை மாசூரி
லெறியும் வேலை மாறாத திறல்வீரா
இமய மாது பகீர திநதி பால காசார
லிறைவி கான மால்வேடர் சுதைபாகா

கலக வாரி போல்மோதி வடவை யாறு சூழ்சீத
கதிர காம மூதூரி லிளையோனே
கனக நாடு வீடாய கடவுள் யானை வாழ்வான
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

**பொருளுரை**

**அலகின்மாறு மாறாத கலதி பூத வேதாளி**
**அடைவு இல் ஞாளி கோமாளி அறம் ஈயா**

விளக்குமாறு மாற்றமில்லாத மூதேவி, பூதம், பேய், முறையில்லா நாய், கோணங்கி தருமஞ்செய்யாது.

**அழிவு கோளி நாணாது புனுகு பூசி வாழ் மாதர்**
**அருள் இலாத தோள் தோய மருள் ஆகிப்**

அழிவைத் தேடுபவன் வெட்கமின்றிப் புனுகு போன்ற வாசனைத் திரவியங்களைத் தம் தேகத்தில் தடவி வாழுகின்ற பொது மாதர்கள் அருள் இல்லாத தோள்களைத் தழுவ எண்ணிக் காம மயக்கம் கொண்டு

**பல கலா ஆகரா மேருமலை கர அசலா வீசு**
**பருவ மேகமே தாரு என யாதும்**

பல கலைகளுக்கும் உறைவிடமானவரே! கருணையில் மேருமலை போன்றவரே! மலைபோன்ற புயத்தை உடையவரே! பருவகால மழைமேகம் போன்ற வள்ளலே! கற்பகதாருவே என்று கூறினாலும் ஒரு சிறிதும்

**பரிவு உறாத மாபாதர் வரிசை பாடி ஓயாத**
**பரிசில் தேடி மாயாதபடி பாராய்**

இரக்கம் கொள்ளாத மகா பாதகர்களைப் புகழ்ந்து பாடி ஓய்வில்லாமல் பொருள்தேடி அழிந்து போகாத வண்ணம் வழிநடாத்துவாய்.

**இலகு வேலை நீள்வாடை எரிகொள் வேலை மாசூரில்**
**எறியும் வேலை மாறாத திறல் வீரா**

விளங்குகின்ற வேலாயுதத்தை நீண்ட வடவைத் தீயையுடைய கடல் மீதும் பெரிய சூரபன்மன் மீதும் எறிகின்ற வேலையை விடாத திறமையுடைய வீரரே!

**இமய மாது பகீரதி நதி பாலகா சாரல்**
**இறைவி கான மால் வேடர் சுதைபாகா**

இமயமலை பெற்ற உமையவளுக்கும் கங்கா நதிக்கும் மைந்தனே! மலைச்சாரலில் இருந்த இறைவியாய்க் காட்டில் வாழும் பெருமையும் கொண்டவரான வேடர்குலப் பாவையாகிய வள்ளியம்மையின் மணாளனே!

**கலக வாரிபோல் மோதி வடவை ஆறு சூழ்சீத**
**கதிர காம முது ஊரில் இளையோனே**

பேரொலி உடைய கடலைப் போன்று அலைமோதி வரும் மாணிக்க கங்கையினால் குளிர்ச்சி பொருந்தியுள்ள கதிர்காமம் எனும் பழைய திருப்பதியில் இளம்பூரணனாக இருப்பவனே!

**கனக நாடு வீடாய கடவுள் யானை வாழ்வு ஆன**
**கருணை மேருவே தேவர் பெருமாளே.**

பொன் உலகத்தைக் கோவிலாக உடையவரே! தெய்வயானை அம்மையாருக்கு வாழ்வாக இருக்கின்றவரே! கருணை செய்வதில் மேருமலை போல் உயர்ந்தவரே! தேவர்கள் போற்றும் பெருமையின் மிக்கவரே!

(தொடரும்....

---

பிழையாகவே நினைத்துப் பிழையாகவே அனுமானமும் செய்து பிழையாகவே பேசுகிறவர்கள் பத்துப்பேர் ஒன்றுசேர்ந்து விட்டால் அப்புறம் சொர்க்கத்தைக்கூட நரகமாக மாற்றி விடுவார்கள். அதைத் தெரிந்துகொண்டு ஒருவர்க்கொருவர் அளவாகப் பழக வேண்டும். அப்படிப் பழகும்போது அவர்கள் உறவு நீடித்து நிலைக்கும்.

**மனச்சான்றின் மகிழ்ச்சியே உண்மையான இன்பமாகும்.**

உ

# பகையும் நட்பும்

*திரு கா. கணேசதாசன் (சமூகஜோதி) அவர்கள்*

**சோ**ழவள நாட்டில் காவிரியின் வடகரையிலுள்ள ஊர் திருப்பெரு மங்கலம். இது திருப்புன்கூருக்கு வடக்கில் ஏறக்குறைய ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது. இவ்வூரில், பரம்பரை பரம்பரையாகச் சோழ மன்னர்களின் தளபதிகளாக விளங்கிய தனிச் சிறப்புப் பெற்ற "ஏயர்கோன்" எனும் குடியினர் வாழ்ந்து வந்தனர். இவர்கள், வேளாண் தொழிலிலும் சிறந்து விளங்கியவர்கள்.

இத்தகைய பெருமை மிக்க குடியில் தோன்றியவர் கலிக்காமர். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். படைக் கலப் பயிற்சியிலும் தேர்ந்தவர். சிறந்த சிவபக்தர். திருப்புன்கூரிலான சிவன் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்தவர். சிவபிரானைத் தாழ்வாக எண்ணுபவர்களை வெறுத்து ஒதுக்குவதோடு அவர்களைத் தண்டிக்கவும் தயங்கமாட்டார்.

நம்பியாரூரரான சுந்தரர் கொஞ்சமும் அஞ்சாமல், சிவபிரானையே பரவை நாச்சியின் ஊடலைத் தீர்க்கத் தூதாக அனுப்பிய செய்திகேட்டுத் துடித்தார். கலிக்காமர் ஆண்டவனை ஓர் அடியான் ஏவல் புரிய அனுப்புவதா? பெண்ணாசை பிடித்தவனைப் பிரானின் தொண்டனென்று எப்படிச் சொல்வது? என்ன பாவம்! இது பெண் ஒருத்தியின் மீதுள்ள ஆசையினால் தேவரும் காண்டற்கரிய திருவடிகளைத் திருவாரூர் வீதியிலே ஓரிரவு முழுவதும் அலையவிட்ட அவன் தொண்டனா? இத்தகைய கொடுமை புரிந்தவனைச் சும்மா விடமாட்டேன். என்றெல்லாம் கலிக்காமர் குமுறிக் கொந்தளித்தார்.

கலிக்காமரின் கடுஞ்சீற்றம் சுந்தரர் காதிலும் எட்டியது. சுந்தரருக்கும் தான் செய்தது தவறென்று புரிந்தது. எனவே தினமும் சிவபெருமானிடம் சென்று கலிக்காமரின் சீற்றத்தைத் தணித்து இதற்கொரு தீர்வு காணும்படி மனமுருகி வேண்டிக் கொண்டார். சிறந்த சிவனடியார்களான அவர்கள் இருவரிடையே ஒற்றுமை ஏற்படுத்தச் சிவபிரான் முடிபு செய்தார். அவர்கள் இருவரும் நட்புறவு கொள்வதற்காகக் கலிக்காமருக்குக் குன்மவலி ஏற்படும்படி செய்தார் சிவபெருமான்.

அந்நோயின் கடுமையைக் கலிக்காமரால் தாங்க முடியவில்லை. எவ்வளவோ மருத்துவம் செய்தும் நோய் தீரவில்லை. எனவே, சிவபெருமானிடம் வருந்தி வேண்டினார். ஒரு நாள் இரவு அவர் கனவில் சிவபெருமான் தோன்றி வன்தொண்டன் சுந்தரனைத்தவிர வேறு எவராலும் அந்நோயைத் தீர்க்க இயலாது என்றார். அதைக்கேட்ட கலிக்காமர் வழி வழியாக உமக்குத் தொண்டு செய்யும் மரபில் வந்த என்னை வருத்தும் இந்த நோயைத் தீர்த்தற்பொருட்டுப் பெண்ணுக்காக உம்மைத் தூதனுப்பிய சுந்தரனா வரவேண்டும்? அவனால் என்நோய் தீர்க்கப் படுவதை விட இந்நோயே என்னை வாட்டி வதைப்பது மேல் என்றார்.

சிவபெருமான் அங்கிருந்து மறைந்து சுந்தரர் கனவில் தோன்றி கலிக்

காமனை வருத்தும் சூலைநோயை நீ சென்று தீர்ப்பாயாக என்று கூறி மறைந்தார். நம்பியாரூரர் அதைக் கேட்டு மகிழ்ந்தார். கலிக்காமரின் நோயைத் தீர்த்து நட்புறவு கொள்ள இறைவன் கட்டளைப்படி திருவாரூரிலிருந்து பெருமங்கலம் நோக்கி விரைந்தார். அவர் வரும் செய்திகேட்டு உள்ளம் குமுறினார் கலிக்காமர். அவன் வந்து இந்த நோய் தீருவதை விட உயிரை விடுவதே மேல் என்று கருதியவர் உடைவாளால் தன் வயிற்றைக் கிழித்துக் கொண்டார். உடனே அவரது உயிர் பிரிந்தது.

அதைக் கண்ட கலிக்காமரின் மனைவியும் உடனே உயிர்விடத் தீர்மானித்தாள். அதற்குள் சுந்தரர் வந்துவிட்டார். என்ற செய்திவரவே கணவரின் உடலை மறைத்துவிட்டு "யாரும் அழ வேண்டாம்" என்று கூறிவிட்டுச் சுந்தரரை வரவேற்றாள். அப்போது கலிக்காமரின் வேலையாள் அவர் உள்ளே படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறார் என்றான்.

அவரைப் பார்த்தே தீரவேண்டும் என்றார் சுந்தரர். வேறு வழியில்லாமல் வேலையாள் உள்ளே அழைத்துச் சென்று ஏயர்கோன் கலிக்காமரைக் காட்டினார். குடல் சரிந்து இரத்த வெள்ளத்திற் கிடந்த கலிக்காமரின் உடலைக் கண்டு நம்பியாரூரர் மனம் துடித்தார். அவர் சென்ற வழியே நானும் செல்வேன் என்று கூறிக் கீழே கிடந்த உடைவாளை எடுத்தார்.

அதைக் கண்டு அனைவரும் திகைத்து நிற்கும்போது சிவபெருமான் திருவருளால் கலிக்காமர் உயிர் பெற்றெழுந்து வன்தொண்டரின் கையிலிருந்து வாளைப் பறித்துக் கொண்டார் அந்தக் காட்சி அங்கிருந்த அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. சுந்தரரும் கலிக்காமரும் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவிக் கொண்டனர். அதன்பின் நெருங்கிய நண்பர்களாயினர்.

## *சிவராத்திரியெனும் சிறந்த விரதம்*

சிவனுக் குரிய சிறந்த விரதம்
சிவராத் திரியெனும் விரதமே ஆகும்
அவமே பொழுதை அவனியில் போக்கா(து)
அனுஷ்டித் தவனின் அருளைப் பெறுவீர்
சிவனின் சோதி வடிவின் அடிமுடி
தேடித் தேடிப் பிரமனும் விஷ்ணுவும்
துவண்டு போயினர் அகந்தை அகன்றது
சோதி வடிவம் சுருங்கி லிங்கமாய்
இவர்கள் முன்னே காட்சி கொடுத்தது
என்றும் சிவனே பெரியவர் வல்லவர்
விபரம் தெரிந்து சிவனை வேண்டினர்.
வேத நாயகன் அருளே புரிந்தார்.

*கவிஞர் வ. யோகானந்தசிவம்*

**இருளை இருள் அகற்றாது ஒளிதான் அகற்றும்.**

உ

# சந்திரன் சாபம் சாடிய சங்கரன்

*திரு சிவ சண்முகவடிவேல் அவர்கள்*

தக்கன் சிவபெருமானை நினைந்து தவம் செய்தான். தக்கனுடைய தவத்திற்குச் சிவபெருமான் மகிழ்ந்தார். அவன் முன்னிலையில் காட்சி கொடுத்தார். தக்கன் கேட்கும் வரங்களை எல்லாம் உமாபதி ஈந்தார். வரம் பெற்ற தக்கன் வளவியனானான். தற்புகழ் மிக்கான். தருக்குத் தானாகத் தக்கனைத் தேடிவந்து சேர்ந்து கொண்டது.

தக்கன் ஈராயிரவர் ஆண் மகார்களைப் பெற்றான். பெற்றும் ஒரு மகனால் ஒரு பயன் பெற்றிலன். அதனால் ஆண் பிள்ளைகளிடத்தில் வெறுப்புற்றான்.

பெண் பிள்ளைகளை மகளிராகப் பெற்றான். அவர்களுடைய எண்ணிக்கை இருபத்தேழு. அவர்கள் அசுவினி முதலான நட்சத்திரக் கன்னியர். உரிய பருவத்தில் கன்னியரைக் கடிமணம் செய்து கொடுத்தான். அழகும் குளிர்ச்சியும் ஒளியும் ஒருங்கு சேரப்பெற்ற சந்திரமூர்த்தி நாண்மீன் நங்கையருக்கு நற்கணவனானான்.

மணவினை மகிழ்வின் பின்னர், தக்கன் சந்திரமூர்த்தியைப் பார்த்துச் சொன்னான்.

"மதியமே! எல்லா மகளிரிடத்தும் ஒரே விதமாக அன்பு பாராட்ட வேண்டும். சில கன்னியரோடு அன்பு பாராட்டியும் ஒரு சிலரோடு முகம் சுளித்தும் நடத்தல் ஆகாது"

என்று நற்புத்தி நவின்று தண்ணிலவைத் தாரகை நங்கையரோடு ஏக விடை புரிந்தான்.

மாமனாருடைய வாக்கிற்கு மதியம் மறுமாற்றம் மொழிந்திலன். விடைபெற்றுச் சென்றான்.

பூரணசந்திரன் ஒரு அழகிய விமானத்தில் ஏறினான். வான் வழிக்கொண்டு சென்றான். தன்னுடைய மனைவிமார்களாகிய கன்னியரோடு கலந்து உறவாட உன்னினான். ஒருநாளில் ஒரு கன்னியோடு மருவ மனம் வைத்தான். அவ்வாறே நாள் ஒன்றிற்கு ஒருத்தியிடமாக இன்பம் நுகர்ந்து நாள்தோறும் கூடிக் குலாவினான்.

இருபத்தேழு தாரகைகளில் இருவர் மிகப் பேரழகு உடையவர்களாகத் திகழ்ந்தார்கள். குற்றமில்லாத கார்த்திகைக் கன்னி ஒருத்தி மற்றையவள் உரோகிணி என்பாள். அவர்கள் இருவரிடத்திலும் சந்திரமூர்த்தி ஆற்ற அன்பு பாராட்டினான். இன்புற்று இருந்தான்.

மதியம் மற்றைய மனைவிமாரிடத்தில் மனம் மறுகினான். இருது காலத்தில் மனைவியை அணுகாத கணவன் போலக் கருதி வந்தான். சந்திரமூர்த்தியின் இந்தத் தகாத செயலைக் கண்ட ஏனைய மனைவிமார்கள் மனம் பொருமினார்கள். தக்கனிடம் சென்றார்கள். கண்ணீரும் கம்பலையுமாய்த் தம் தந்தையாரிடம் கணவனுடைய முறையற்ற நடத்தையை முறையிட்டார்கள். அதனைக் காது கொடுத்துக் கேட்ட தக்கன் கவலைமிகுந்து நொந்தான். பின்னர் சாலவும் கோபம் கொண்டான்.

"சந்திரமூர்த்தியின் கலைகள் அனைத்தும் தேய்ந்து அற்றுப் போகக் கடவது" என்றொரு கொடுஞ்சாபமிட்டான்.

*சோம்பல் எல்லாவற்றையும் கடினமாக்கும்.*

சிறுவிதி வழங்கிய பெருஞ் சாபத் தினால் என்றும் தேயாத மதியினுடைய ஒப்பற்ற கலைகள் தேயத் தொடங்கின. நாள் ஒன்றிற்கு ஒரு கலையாக நிலவின் கலைகள் நிலை தளர்ந்தன. பொய்ப் பெருஞ் செல்வம் பெற்றவன் புகழ் போலச் சந்திரனுடைய கலைகள் தேய்ந்து வந் தன.

பதினைந்து தினங்கள் பறந்தன. சந்திரனிடத்தில் ஒருகலை எஞ்சிநின்றது. அக்கலை இவன் தான் சந்திரமூர்த்தி என்று சான்று பகர்வது போல இருந்தது.

மதியம் தன்னிலைக்கு மிக்க நாணங் கொண்டான். வருந்தினான், வாடி னான், தளர்ந்தான், செய்வதறியாது திகைப்படைந்தான். மதியப் புத்தேள் தன் னுடைய துன்பத்தைத் துடைக்க இந்திர னுடைய உதவியை நாடிச் சென்றான். சந்திரன் தனக்குத் தக்கனால் நேர்ந்த சாபத்தைத் தேவேந்திரனிடத்தில் எடுத்து இயம்பினான்.

"இந்திர, நண்ப!" தக்கன் எனக்குச் சாபம் தந்தான். அதனால் என்னுடைய குளிர்ந்த கலைகள் குன்றிவிட்டன. நாள் ஒரு கலையாகப் பதினைந்து கலைகள் கலைந்துவிட்டன. ஒரு கலை மாத்திரம் எஞ்சியுள்ளது. இந்த ஒரு கலையும் இன்றைய நாளில் இல்லையாகும். என் மேலாம் தன்மை மங்கும். பூரணசந்திரன் என்னும் பெயர்பொன்றும். எங்கும் பரந்த என் புகழ் இகழாகும். இசை இல்லையாக வசை வந்து சேரும்.

"நான் இனி என்ன செய்வேன்? நான் ஒன்றும் அறியேன். இந்திரா! என் தீங்கு நீங்க ஏங்கும் எனக்கு ஒரு புந்தி புகல்வாய்!" என்றுரைத்துப் புலம்பினான், மங்குல்தவழ் மதி. தேவேந்திரன் சந்திரனை தழுவினான்.

"என்னுடைய ஒப்பில்லாத உத்தம தோழன் நீ அல்லவோ! அஞ்சற்க" என்று ஆதரத்தோடு அறைந்தான். பின்னர் இந்து வைப் பார்த்து இயம்புவான்.

"நீ முந்து ஒரு ஞான்று ஆனை முகக் கடவுளை அலட்சியம் பண்ணி அழியாப் பழி பூண்டாய். இன்று தக்கனால் சாபத்துக்கு ஆளானாய்! மதியமாக இருந் தும் மதியற்றாய்! நீ தக்கனால் பெற்ற பழி தவிர விதியொடு விளம்பு. பிரமதேவர் மைந்தனை வேண்டுதல் செய்வார். உன் சாபத்தைத் தக்கனால் போக்குவிப்பார்."

என்று வச்சிரம் எடுத்த செம்மல் சந்திரனைப் பிரமதேவரிடத்தில் ஆற்றுப் படுத்தினார்.

"இச்செயல் இனிது. நான் அச் செனப் புரிவேன்" என்றுரைத்துத் திங்கள் எழுந்தான். முச்சகம் தன்னில் முளரியான் உலகம் புக்கான்.

சந்திரன் சத்திய உலகைச் சார்ந் தான். மலராசனரின் மலர்ப்பதங்களில் மண்டியிட்டு வணங்கினான். மாமனார் தனக்கு மதியாது மொழிந்த கொடிய சாபத்தை எடுத்து விளக்கினான்.

"தங்கள் புதல்வன் தக்கனைத் தெருட்டுங்கள். நான் பெற்ற சாபத்தையும் என் மனத்துயரையும் மாற்றிவிடுங்கள். என்று மதியம் தன் மனக்குறையைக் கூறி னான்.

அதனைக் கேட்ட அம்புயன் அறை குவான்.

"திங்களே! இப்பொழுது எல்லாம் தக்கன் தன் மனம் போன போக்கிற் போய்க்கொண்டிருப்பான். தக்கன் சான் றோரைச் சார்ந்து வாழும் சார்பிலன். நான் அவனுக்குத் தந்தை தான். என் உரையை

இறையளவும் ஏற்கமாட்டான். எதிராக மறுத்துரைப்பான். யான் அவன் பக்கமும் செல்லமாட்டேன். அவன் முன்னிருந்த தக்கன் அல்லன். யாவருக்கும் முதன்மையாம் தலைமை பெற்றுள்ளான்"

."நான் தக்கனை என்னென்பேன்! முன்னையநாளில் சிவபெருமானுடைய அரிய பெரிய இயல்புகளை எல்லாம் என்னால் தெரிந்து கொண்டான். பலகாலம் சிவனைக் குறித்துப் பயின்று தவத்தில் தங்கினான். அளவற்ற பெருஞ் செல்வங்களை எல்லாம் சிவபரம் பொருளிடத்தில் பெற்றுக் கொண்டான். செல்வத்தில் அழுந்தும் தக்கன் செல்வத்தை நல்கிய செம்பொருளைச் சிறிதளவும் சிந்தியாதவனானான்."

"அது ஒரு புறம் இருக்க உன் குறை போக்க அவனை வேண்டுவமாயினும் எம்மீது கோபங்கொள்வான். தன் புகழில் மயங்கி என்னை இகழ்வான். நின் சாபத்தையும் நீக்கவும் மாட்டான்."

"திங்களே! நான் ஒன்று உரைப்பக் கேள்! மெய்ப்பொருளான செம்பொருள் நம்மவர்களுக்கு நன்னாயகர். பழுதற்ற பரமாசாரியார். நீறணி மேனி நிருமலர். நெற்றிக்கண்ணர். பெற்றம் ஊர்தியார். நீதியார். உன்னுடைய மாசினை உடன் மாற்றுவார். கயிலாய நாயகரைக் காணும் சிந்தனை உனக்கு வந்ததில்லைப் போலும். ..

"மதியமே! நீ மங்கை பங்கர் பாங்கர் செல்லுவாய்! உன் சாப வரன்முறை சாற்றுதி. அக்கணம் உன்குறை தீரும் என்பதனை இயம்பவும் வேண்டுமோ. நீ பெரிதும் பேதையாயினை -

"பெருந்தண் மாமதி! கண்ணுதற் கடவுள் மேயின கயிலையங்கிரி மேவுதி! நின் துன்பம் ஒழிமதி -

பிரமதேவருடைய பெரும் பேச்சுத் தெண்ணிலாவிற்குப் பெருந்தண்ணளி செய்தது. சந்திரதேவு பிரமதேவரை வணங்கினார். விடை பெற்றுக்கொண்டார். விரைந்துடன் சென்று வெள்ளியங் குன்றினைக் குறுகினார். ஞான மூர்த்தியினுடைய செம்பொற் கோயிலினைச் சென்று சேர்ந்தார்.

முன்னுள நந்திதேவர் முறைப்படி விடை ஈந்தார். தண்மதி பொன்னவிர் செஞ்சடைப் புனிதநாயகன் முன்னுற அணுகினன். முடிவிலாத அன்பினோடு வணங்கினன் முக்கண் மூர்த்தியை. முழுமதி வேத வாய்மையால் துதித்து நின்றனன். மதிநுதல்மங்கை பங்கன் திங்களைத் திருவருள் நோக்கஞ் செய்து;

"தண்மதீ! நீ வந்த காரியம் யாதோ? சாற்று" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

திங்கள் எம்பிரானைச் சேவித்துச் செப்புவான்! உயிர்க்குயிரான உத்தம! வன்மை மிக்க தக்கன் என்னைச் சபித்து விட்டான். என் செறிந்த பெருங்கலை அனைத்தும் வறிதாய் மறைந்தன. ஒரு கலை மாத்திரம் எஞ்சியுள்ளது. இன்று இக்கலையும் தேய்ந்து நீங்கும். நான் இனிச் செய்வதென்னே!

"கயிலை நாயக! எஞ்சிய இக் கலை துஞ்சிடாமல் இருக்கவும், துஞ்சிய கலைகள் அனைத்தும் வந்து வளரவும் நஞ்சணி கண்ட, அஞ்சற்க என்று எனக்கு அருள்க - தஞ்சம் எமக்கு மஞ்சு சூழ் மலை மருந்து அல்லால் வேறு யார்?

என்று தெண்ணிலா மலர்ந்த வேணியானிடத்தில் தண்ணிலவு இழந்தவன் பிரார்த்தித்தான். கண்ணுதற் கருணையங் கடலாதலின்.

வாதாடப் பலருக்குத் தெரியும்.

"கலை இழந்த திங்களே! கவலைக் கடலினின்றும் நின்னைக் கரை சேர்ப்போம். அஞ்சற்க" என்று அருள் பாலித்தார்.

வேற்றாகி விண்ணாகி நின்ற மாற்றார் புரம் அட்ட ஏற்று வாகனன் மாற்ற முற்ற மதியிடத்தில் எஞ்சி இருந்த ஒரு கலையைத் தமது திருக்கரத்தில் ஏற்றுக் கொண்டார். தமது அழகிய நீண்ட திருச் சடை மீது சேர்த்திக் கொண்டார். அவ் வழித் தக்கன் சாபம் தளர்ந்தது. சந்திரனைச் சார்ந்திலது.

திங்களினுடைய ஒருகலை பொற்றை வில்லாகக் கொண்ட பற்றறுப்பார் கற்றையஞ் சடைமிசைக் கவின்று பூத்தது. அப்பொலிவைத் திருமுறைத் திருமொழிகளோடு ஒப்பிட்டு உணர எப்போதும் இல்லாத இன்பம் தப்பாமல் தோற்றும்.

"குழவிப்பிறை சடைமேல் வைத்தார் போலும்.
"செழுமாமதி சென்னி வைத்தான் கண்டாய்
"செஞ்சடை மேல் வெண்மதியம் சேர்த்தினான்
" தூவெண் மதிசூடி
"பித்தாபிறை சூடி
"தெண்ணிலா மலர்ந்த வேணி -
திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் திங்களைப் பார்த்து.

"மதியே! மனம் மறுகாதே! இக் கலை எமது முடியில் முகிழ்க்கும் சிறப்புப் பெற்றது. உனது தேய்ந்து போன கலைகள் எல்லாம் நாளுக்கு ஒரு கலையாக உன்பால் வந்து வளர்ந்து தோன்றும்.

"பதினைந்து நாட்களில் கலைகள் நிரம்பும். பின்னர் அம்முறையே தேயும். ஒரு கலை அழியாது என்றும் நின்று நிலைக்கும். இனிமேல் எக்காலமும் உன் கலைகள் இந்த வண்ணம் நிகழும்.

என்று திருவாய் மலர்ந்தருளினார்.

தண்மதி உண்மகிழ்ந்தான். அண்ணல் பதயுகங்களை வணங்கினான். துண்ணென அருள்விடை பெற்றுத் தன்னுலகு நண்ணினான். பின்னர் இரவோன் என்றும் ஆவதும் அழிவதும் போன்றனன்.

நெற்றிக் கண்ணுடை நிமலர் உற்றவர்களுக்கு அருள்புரியும் உண்மையைத் தெற்றென உணர்த்தல் போல் கற்றையஞ் சடைமிசை மதிக்கலை திகழ்ந்தது.

தேவர்களை வருத்தும் வினைகளையும் சாபங்களையும் துயரங்களையும் துடைக்கும் தூய ஆதியங் கடவுள் நிலவின் சாபத்தை நீக்கினார் என்பது சிவபராக்கிரமம் என்று செப்பத் தகுவதே.

**நல்ல மனிதனின் இயல்பு**

சந்தண மரத்தைச்சுற்றி பாம்புகள் இருக்கும். பாம்புகளோ விஷமுள்ள ஜந்து. அந்தப் பாம்பின் விஷத்தால் சந்தணமரம் கெடுவதில்லை. சந்தணமரம் எல்லோருக்கும் உபயோகத்தை செய்து வருகிறது. அதுபோலவே நல்ல மனிதர்களுக்கு சில கெட்டவர்களது சேர்க்கை ஏற்பட்டாலும் அவர்கள் கெட்டவர்களாக மாறாமல் சந்தணமரத்தைப்போல் உலகத்தவர்க்கு நன்மையே செய்து வருவார்கள்.

**நல்ல மனச்சாட்சி கடவுளின் குரல்.**

உ

(தொடர்ச்சி...

# மானுடரின் ஆன்மஈடேற்றம்

*திருமதி நா. சந்திரலீலா அவர்கள்*

யாழ்ப்பாணத்தில் நல்லூரில் வாழ்ந்த சித்தர்களில் ஒருவரான யோகர் சுவாமிகள் மக்கள் நடந்து கொள்ளும் விதம்பற்றி யதார்த்தமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

"வித்தாரமாகக் கதை பேசிக் கொள்வோம்
வீணருடன் கூடி விளையாடிக் கொள்வோம்
சக்தி, சிவம் ஒன்றான தன்மையைக் காண்கிலோம்
சாதனையால் வேதனையைத் தீர்க்கின்றோமில்லை.
அலங்காரமாக ஆடை அணிந்து கொள்வோம்.
அங்குமிங்கு மெங்கும் கோயிலைத் தேடி அலைந்து திரிவோம்
கலங்காத நன்னெறியிற் செல்கின்றோ மில்லை
கந்தா, முருகா வென்று கத்திக் கொள்வோம்.

நாம் இல்லறவாழ்க்கையில் ஈடுபட்டாலும் தாமரையிலைத் தண்ணீர் போல் பற்றில்லாது மிதிலையை அரசாண்ட ஜனக மகாராஜாவைப் போல இல்லறத் துறவியாக எல்லாவற்றையும் பிரம்மமாக நினைத்து வாழப் பழகவேண்டும்.

இப்பூவுலகில் மக்கள் ஆற்றவேண்டிய மற்றொரு செயல் தர்மம் செய்தலாகும். எந்தவிதமான பிரதிபலனும் எதிர்பார்க்காமல் நாம் அறவழியில் சம்பாதித்த பணமோ, பொருளோ, உணவோ கொடுக்கிறேன் என்ற கர்வம் இல்லாது செய்வது தான் தர்மம். தானம் என்பது ஏதாவது பலனை எதிர்பார்த்து நாம் கொடுப்பது. கோதானம், பூமிதானம், வஸ்திரதானம், ஸ்வர்ணதானம், கன்னிகாதானம், அன்ன தானம் ஆகியன. ஈகையின் முக்கியத்துவம் பற்றி அருணகிரிநாதர் தனது கந்தரலங்காரத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"மலையாறு கூறெழ வேல் வாங்கினானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை நேடி வருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்றதுணையுங் கண்டீர்
இலையாயினும் வெந்த தேயாயினும் பகிர்ந்தேற்றவர்க்கே"

இரப்பவர்க்கு வயிறார உண்ணக் கொடுக்கும் உணவானது கடை வழிக்கு உறுதுணையாகும். உணவு கொடுத்து முருகனை நோக்கித் தவஞ்செய்தல் கூற்றுவனிடமிருந்து தப்ப உதவுமாம்.

வேறு ஒரு பாடலிலும் "வறிஞர்க் கென்று நொய்யிற் பிளவாவேனும் பகிர்மின்கண்" என்பதும் நோக்கற்பாலது. கர்னனைப் போல கொடையிற் சிறந்தவன் ஒருவருமில்லை மரணத்தறுவாயில் கூட பிராமண வடிவில் சென்ற கிருஷ்ணனுக்குத் தனது புண்ணியமனைத்தையும், தனது குருதியைக் கொண்டு தாரைவார்த்துக் கொடுத்து இறுதியில் கிருஷ்ணனின்

தரிசனத்தையும் பெற்றான். கிருஷ்ணர் கேட்டதற்கிணங்க கர்னன் "நான் எத்தனை பிறப்பு எடுத்தாலும் இரப்போர்க்கு இல்லை யென உரையாமல் வரத்தைக் கேட்டான்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்று அது
தள்ளினும் தள்ளாமை நீர்ந்து"

நாம் எண்ணும் எண்ணங்கள் உயர்வாக இருத்தல் வேண்டும். எண்ணிய படி உயர்வு கிடைக்காது போயினும் உறுதியுடனிருப்பின் ஒரு நாள் எப்படியும் அவ்வுயர்வு கிடைத்தே தீரும்.

இறைவனையடைய பக்திமட்டுந் தான் ஒரு வழியென நாம் நினைப்பது தவறாகும். விரோதத்தால், பயத்தால், உறவினால், சிநேகத்தால், பிரேமையால் இறைவனை அடைந்தவர்கள் உண்டு. சிசுபாலன், இரண்ணியகசிபு ஆகியோர் விரோதத்தால் நிந்திப்பதற்காக அவனையே நினைத்து அடைந்தனர். கம்சனுக்கு அசரீரி சொன்ன "கிருஷ்ணன் தான் உனக்கு யமனாக வரப்போகிறான்" என்ற பயம் காரணமாக அவனை நினைத்து பகவானை அடைந்தான். வசுதேவர் போன்றோர் உறவின் நிமித்தம் அவனை அடைந்தனர். பஞ்சபாண்டவர்கள் கிருஷ்ணனுடன் சிநேகபாவமாக இருந்து அவனை நினைத்து அடைந்தனர். கோபிகா ஸ்திரிகள் கிருஷ்ணன் மீது வைத்த எல்லையற்ற பிரேமையினால் அடைந்தனர். ஆண்டாள், மீராபாய் போன்றோரும் பகவான் மீது பிரேமை வைத்து கணவனாக அடைந்தனர். பக்தியினால் புரந்தரதாஸர், சக்குபாய், கோராக்கும்பர், ராமனுஜர், ஆழ்வார்கள், இன்னும் பலர் பகவானை அடைந்தனர். பகவானை சேவிக்கும் பக்தனை விட பகவானின் அடியார்களுக்குத் தொண்டு ஆற்றி மிக இலகுவாக முத்தியடையலாம். பகவான் தொண்டர் உள்ளத்துள் வீற்றிருப்பார். தொண்டர் பெருமை சொல்லவும் வேண்டுமோ! ஆன்மீக வாழ்க்கை வாழவேண்டுமென்ற ஆசை பலருக்குண்டு. ஆன்மீக நூல்களைப் படிக்கிறோம். நல்ல அறிஞர்களின் சொற்பொழிவு, உபன்நியாசம், தெய்வீகப் பேருரைகளை செவிமடுக்கிறோம். ஆனாலும் இவற்றால் பலன் கிடையாமல் ஏமாறுகிறோம். ஆன்மீக மயமாவதற்கு பெரிய மகான்களாகிய ஸ்ரீ ராமகிருஷ்ணர், ரமணர், ராமானுஜர் புரந்தரதாசர் போன்றவர்கள் எப்படி வாழ்ந்தார்கள். அவர்கள் எமக்கு விட்டுச் சென்ற போதனைகள், உபதேசங்களைப் பின்பற்றி வாழ்வது தான். ராமகிருஷ்ணரோ, ரமணரோ சாத்திரங்களைப் பெரிதாகப் படிக்கவில்லை. இருந்தும் அவர்களுக்கு இருந்த ஞானம் மற்றவர்களுக்கு இல்லை. பேரறிஞர்கள் காலடியில் அமர்ந்து போதனைகளைக் கேட்டு இன்புற்றனர். ராமகிருஷ்ணர் தனக்கு "கடவுளைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது" என்று கூறுவார். நாமும் பார்க்கும் அனைத்தையும் பிரம்மமாகப் பார்த்து வாழமுயலவேண்டும்.

கடவுளை வேறு எங்கும் தேட வேண்டாம். அவர் நமது உள்ளத்தின் கண்ணே மறைந்து இருக்கிறார். எம்மிடமுள்ள தீய குணங்களான கோபம், பொறாமை, ஆணவம், சுயநலம், ஆசை கடவுளை மறைத்து விடும் இக் குணங்களை நீக்குவோமாயின் கடவுள் தன்மை நிச்சயம் வெளிப்படும்.

வளமுடன் வாழும் நண்பர்கள் உன்னை அறிவர்.

பகவத்கீதையில் கர்மயோகத்தில் மூன்று விடயங்களை பகவான் வலியுறுத்துகிறார். எதிலும் பற்றற்று இருத்தல், பலனை எதிர்பார்த்து செய்யாமை, எதையும் ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்தல் ஆகியன. பற்றற்று இருத்தல் என்பது தாமரையிலைத் தண்ணீர் மாதிரி இலையில் ஒட்டாது இருத்தல். அத்தண்ணீரும் வெகு நேரம் நில்லாது கீழே உருண்டுவிடும். பின் மண்ணோடு மறைவதுபோல நமது வாழ்க்கையும் மறைந்து விடக்கூடியது.

பலனை எதிர்பார்த்து செய்யாமை என்றால் பலன் வேண்டாம் என்றில்லை. என்ன பலன்வரினும் அதை ஏற்றுக்கொள்ளத்தயாராக வேண்டும். மூன்றாவது செய்கின்ற ஒவ்வொரு செயலையும் ஆண்டவனுக்கு அர்ப்பணித்து அவனால்தான் எல்லாமே நடக்கிறது நம்மால் ஒன்றும் ஆகாது என்ற உண்மையை உணர வேண்டும்.

எமக்கு 2 கண்கள், காதுகள், கைகள், கால்கள் தந்த இறைவன் ஒரேயொரு வாயை மட்டும் படைத்தது ஏன்? சாப்பிடவோ, கதைக்கவோ மட்டுமல்லாது. இறைவனுடைய நாமங்களையும் உச்சரிக்க வேண்டும். அருணகிரிநாதர் தனது கந்தர் அனுபூதியில் கல்வியும் அறிவும் தந்தது. அதன்மூலம் முருகனைப் பாடுவதற்கே என்றார். "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்றார் திருமூலநாயனார். அப்பர் சுவாமிகளோ ஒரு படிமேலே போய் எல்லா அங்கங்களையும் போற்றுகிறார்.

வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங் காலமே

நாமும் இறைவன் புகழைப் பாடிப் பரவுவோம்.

ஆன்ம ஈடேற்றத்திற்குத் தேவையான மற்றுமொரு சாதனம் தியானம் ஆகும். காவியுடை தரித்து துறவறம் பூண்ட சந்நியாசிகள்தான் காட்டிற்குப் போய் தியானம் செய்யவேண்டுமென்று எண்ணுவது தவறு. கிருகஸ்தராகிய நாமும் தினமும் சிறிது நேரமாகிலும் இந்திரியங்களை அடக்கி, மனத்தை அங்குமிங்கும் ஓடவிடாது ஒரு நிலைப்படுத்தி பரம்பொருளைச் சிந்தித்தபடி இறைவன் நாமங்களை மனதினுள் உச்சரித்தபடி தியானம் செய்யப்பழகவேண்டும். ஆரம்பத்தில் மனம் பலவாறு ஓடித்திரியும். நாளடைவில் மனத்தைக் கட்டுப்படுத்தி நாமும் பிரம்மம் என்னும் நிலையை யடைதல் வேண்டும். நான் அப்பா, மகனின் தந்தை, மனைவிக்கு கணவன், பணியாளர்களுக்கு மேலதிகாரி என்று நினைப்பதை விட்டு ஜீவாத்மாவாகிய நான், பரமாத்மாவாக மாறி அவருடன் ஒன்றவேண்டும். அதற்கு எம்மிடமுள்ள துர்க்குணங்களாகிய காமம், குரோதம், உலோபம், மதம், மாச்சரியம், கோபம், ஆசை, களவு, நிந்தனை முதலியவற்றை நீக்கி புனிதமான ஆத்மாவாக மாறல்வேண்டும். ஒரே நாளில் எல்லாம் மாறக்கூடியதல்ல. படிப்படியாக மாற்றிக் கொள்ளப்பழகல் வேண்டும். ஒரு மோட்டார் வண்டியைப்

பண்பு அமைவது ஒருவருடைய இளமையில்.

பார்த்தால் எமக்கு ஆசைவந்துவிடும். ஞானியும் அதைப் பார்ப்பார். ஆனால் அத்துடன் விட்டுவிடுவார். நாமோ அது நம்மிடமிருந்தால் நல்லது என்று விலைக்கு வாங்குவோம். பிறகு அது இல்லாமல் எம்மால் இருக்கமுடியாது. தேவைப்பொருளைப் போகப்பொருளாக மாற்றி விடுவோம். அவ்வாறு இல்லாமல் ஞானியரின் நிலைக்கு நாம் மாறவேண்டும். உலகப் பொருட்களில் ஆனந்தத்தை தேடியலைகிறோம். அது நமக்குள்ளே இருக்கிறது. ஆசை குறையக்குறைய நம்முள்ளேயே ஆனந்தத்தை தேடியடையமுடியும். நாமும் பிரம்மமாக மாறமுடியும்.

ஆன்மீக வாழ்வு, கீதை, தோத்திரங்கள் போன்றவை துறவிகளுக்காக ஏற்பட்டவை எனத் தவறாக எண்ணுகிறோம். பகவத்கீதையை உலகிலுள்ள எல்லா மக்களும் ஏற்று அனுசரித்து நடக்கமுடியும். நமது வாழ்க்கையை எப்படிப் புனிதமாக வைத்துக் கொள்வதென்று கூறுகிறது. புனிதமாக இருந்தால்தான் மனஅமைதி, சாந்தி, சந்தோஷம் கிடைக்கும். கீதை கூறுவது போல் நம்மை நாமே உயர்த்திக் கொள்ளவேண்டும். வயலில் என்ன விதைக்கின்றோமோ அது தான் பயிராகக் கிடைக்கும். அது போலவே நம் மனத்தில் விதைக்கப்படும் எண்ணங்களுக்குத் தகுந்தாற் போல் பலன் கொடுக்கும். பிறருக்கு கேடு நினைத்தால் அக் கெட்ட எண்ணங்கள் மனதில் விதைக்கப்பட்டு உடலையும், உள்ளத்தையும் பாதிக்கும். நல்ல எண்ணங்களை விதைப்பின் நாமும் மகிழ்வாகவும், ஆரோக்கியமாகவும் வாழமுடியும். மற்றவர்கள் எம்மிடம் எப்படி நடக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ நாமும் அவர்களிடம் அப்படியே நடந்து கொண்டால் வாழ்க்கையில் பிரச்சனையே இல்லை. பகவான் கீதையில் கூறியது போல் "நீயே உனக்கு நண்பன், நீயே உனக்கு எதிரி."

எல்லா உயிர்களிடத்தும் ஆண்டவனைக் காணவேண்டும். வள்ளலார் கூறியது போல "வாடிய பயிரைக் கண்டபோது வாடினேன்" என்ற உணர்வு ஜீவகாருண்ய பண்பு ஏற்படவேண்டும். ஏகநாதர் என்ற பக்தனுக்கு அவ்வாறு ஏற்பட்டது. ஒரு சமயம் சில பக்தர்கள் ராமேஸ்வரத்திலிருந்த சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்வதற்கு திரிவேணியிலிருந்து கங்கா ஜலம் காவடி போல்கட்டி இரு புறமும் கால் நடையாக எடுத்துச் சென்றனர் அக் கூட்டத்தில் ஏகநாதரும் இருந்தார். மிகவும் கடினமான அக்காரியத்தை சூரியனின் வெம்மையைத் தாங்கிக்கொண்டு சென்றார்கள். வழியில் கழுதையொன்று தாகத்தினால் தவித்து நின்றது மற்றெல்லோரும் "ஐயோ பாவம்" என்று கூறிக்கொண்டு சென்றார்கள். ஆனால் ஏகநாதரோ காவடியை இறக்கி ஒரு தோண்டியிலுள்ள கங்கா ஜலத்தைக் கழுதைக்கு ஊற்றினார். அதன் தாகம் தணியவில்லை. மற்றைய ஜலத்தையும் ஊற்றினார். ஏனையோர் எல்லா ஜலத்தையும் ஊற்றிவிட்டீர்கள். சிவனின் அபிஷேகத்திற்கு என்ன செய்வீர்கள்? என வினவினார். அதற்கு ஏகநாதர் "இக் கழுதையின் உருவில் நான் சிவனைப் பார்க்கிறேன். நான் வந்த காரியம் முடிந்து விட்டது. ஊர் திரும்புகிறேன்" என்று கூறிச் சென்றார். எமக்கும் இதே பக்குவம் வர வேண்டும்.

உலகியல் பொருட்களுக்கு ஆசைப்படுவதில் என்ன லாபம் வரும்? எம்மிடமுள்ள அஞ்ஞானம் நீங்கி

ஒழுக்கம் தீமையை மறைக்கிறது.

ஞானத்தைப் பெற நாம் கர்மயோகம் செய்தல்வேண்டும். பலனை எதிர்பாராமல் செய்யின் சித்த சுத்தி ஏற்பட்டு மனம் பரிசுத்தமடையும். நாம் முக்தியடைவதற்கு ஞானயோகம் செய்தல் வேண்டும். அதற்கு குருவின் உதவி கட்டாயம் தேவைப்படும். குருவை அடைந்த பின் மூன்று விடயங்களில் கவனம் செலுத்தவேண்டும். சிரவணம், மனனம், நிதித்தியாசம் மூன்றையும் பின்பற்றவேண்டும். குரு சொல்வதை காதால் கேட்பது சிரவணமாகும். பின் அவற்றை சிந்தனை செய்வது மனனம் ஆகும். இறுதியில் அவற்றை ஆராய்ந்து நமதாக்கிக் கொள்வது நிதித்தியாசமாகும்.

பெற்றோர்களாகிய நாம் எமது பிள்ளைகளுக்குச் சிறுவயது முதல் ஆன்மீக விடயங்களை மனத்தில் பதியும்படி புகட்டவேண்டும். காலையும், மாலையும், கடவுளைத் தொழும்படி கட்டாயப் படுத்தல்வேண்டும். நற்போதனைகளை செவிமடுக்க உபன்நியாசம், மகான்களிடம் அழைத்துச் செல்லல், பொய் பேசாமை, பெரியோரை மதித்தல், உயிர்களிடம் அன்பு காட்டுதல், ஏழைகளுக்கு பொருளுதவுதல், இனிமையாகப் பேசுதல், கோபத்தைக் குறைத்தல், பசித்து வருபவனுக்கு அன்னமிடல், பிற உயிர்களைக் கொல்லாமை போன்ற சீரிய குணங்களை கைக்கொள்ளவிடவேண்டும். சாது தரிசனம் பாவவிமோசனம் என்பதற்கிணங்க சாதுக்கள், ஞானிகள், சுவாமிகள் போன்றோரைச் சந்தித்து ஆசிர்வாதம் பெற்று கால்களில் வீழ்ந்து வணங்குதல் வேண்டும். பெரியோராகிய நாம் சரிவரச் செய்து காட்டின் அதைப் பிள்ளைகளும் பின்பற்றுவர். இன்றைய நாட்டு நிலைமைக்கு எம்மிடத்தில் ஆன்மீகச் சிந்தனைகள் வேரூன்றாததே காரணமாகும். இனியேனும் காலம் தாழ்த்தாது எமது சிறார்களுக்கு ஆன்மீகத்தை புகட்டி வழி நடத்திச் செல்வோமாக.

## தியானம்

இந்தத் தியானம் என்றால் (அது என்ன பொருளா) எல்லோரும் தியானம் செய் என்று சொல்கிறார்களே. தியானம் என்றால் நினைப்பது ஒன்றைத் தொடர்ந்து இடைவிடாது நினைப்பது. நீ எந்த அந்த ஒன்றை ஆழமாகச் சிந்தித்தாயோ அதனால் வரும் நன்மை தீமைகளை அடைவாய். (உன் எண்ண அலைகள் நீ விரும்பும் பொருளில் பட்டதும் உடன் உன்னை நாடிவரும் நீ விடும் அலைவரிசையும் உடையவரின் அலைவரிசையும் ஒரு வரிசையானால் உடன் பலன் கிடைக்கும்) நன்மை தீமை அற்ற ஒன்று தெய்வீகம் சுகம் துக்கம் அற்றதைத் தியானிக்கும் படி (உறுதியாக நினைக்கும்படி) பெரியோர்கள் சொல்கிறார்கள்.

ஆகையால் ஊனக் கண்ணால் காணாததைப் பற்றிக் காண, அறிய வேண்டுமானால் தியானம் செய். இடைவெளி இல்லாது நினை. அளவில்லாத ஆனந்தத்தைக் கொடுக்கும் தியானம் என்பது இதுவே ஆகும்.

*-ஊரெழு வேலன்-*

**வறுமையில் நீ நண்பர்களை அறிவாய்.**

உ

# முன்னோர் சொன்ன கதைகள்

***திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்***

மெய்யறிவு பெற்ற ஞானியர் இறைவனை எங்கும் எதிலும் காண்பர். அனைத்தும் இறைவனது செயலே எனக்கருதுவர். இந்த மனநிலை சாதாரண மக்களுக்கு ஏற்படுவதில்லை. அது மட்டுமன்றி ஞானியின் மனநிலையை அவர்களால் புரிந்து கொள்ளவும் இயல்வதில்லை. இதனால் ஞானிகளை அவர்கள் வாழும் காலத்தில் மதித்துப் போற்ற பெரும்பாலானோர் தவறி விடுகின்றனர். பல்வேறு சந்தர்ப்பங்களில் ஞானியர்களை அவமதிக்கவும் செய்கின்றனர். இதற்குக் காரணம் அவர்களது உயர்ந்த மனநிலையை மற்றையோர் புரிந்துகொள்ளாது தமது நோக்கிலேயே அவர்களைப் பார்ப்பதேயாகும். பொன்னும் பொருளும் மண்ணும் பெண்ணும் அவர்கள் இச்சைகொள்வனவல்ல. எல்லாமே ஒரே தன்மையானவையாய் இறைவனது வியாபகம் கொண்டவையாயே அவர்களுக்குத் தோன்றும்.

அழகிய பெண்ணொருத்தியில் அவர்கள் அம்பிகையையே காண்பார்கள். அவளது கண்களில் அன்னையின் அருட் பார்வையே தெரியும். மற்றையோர் அப் பெண்மேல் இச்சைகொண்டு அவர்கள் பார்ப்பதாகக் கருதுவார்கள். ஏனையோரால் அழகிய பெண்ணில் பராசக்தியைக் காண முடியாததே அதற்குக் காரணம். ஆனால் 'தாம் மிகவும் நல்லவர்கள். அந்த அழகியை உடலால் அணுகவில்லை. இந்த ஞானி அவள்மேல் ஆசை கொண்டுள்ளார். ஆனால் ஞானிவேஷம் போடுகிறார்' என்று மற்றையோர் எண்ணிக்கொள்வார்கள். மெய்யறிவு சித்திக்கும் போதுதான் இத்தகைய தவறான எண்ணங்களிலிருந்து அவர்களால் விடுபடமுடியும். சிந்தித்துப் பாருங்கள். இத்தகைய தவறான எண்ணங்கள் எமது மனங்களிலே கூடத் தோன்றியிருக்கும்.

இந்தியாவிலே இரும்பை என்கின்ற ஊரிலே மாகாளம் என்றொரு கோவில் இருக்கிறது. அங்கு கோவில் கொண்டருளியுள்ள ஈஸ்வரனின் பெயர் மாகாளேஸ்வரர். ஈஸ்வரிக்குப் பெயர் குழல் மொழி நாயகி. மாகாளமுனிவர் வழிபட்டுவந்ததால் இதற்கு மாகாளம் என்று பெயர் வந்ததாகக் கூறுகிறார்கள்.

இங்குள்ள சிவலிங்கத்தின் மேற்பகுதி வெடித்துள்ளது. இதற்கு ஒரு கதை கூறுகிறார்கள். அந்தக்கதை மேற்கூறிய கருத்தை விளக்குகின்றது. கதையைப் பார்ப்போமா?

ஒரு காலத்தில் இந்தக் கோவில் அமைந்துள்ள பகுதியிலே பெரிய பஞ்சம் மேற்பட்டது. நாட்டை அப்போது ஆட்சி செய்த அரசன் பஞ்சத்தைப் போக்க என்ன செய்யலாமென மந்திரி பிரதானிகளுடன் ஆலோசனை கலந்தான்.

'மாகாள முனிவரின் தவமகிமையால் பஞ்சத்தைத் தீர்க்கலாம்' என்று அவர்கள் மன்னனுக்கு ஆலோசனை கூறினார்.

மாகாள முனிவரோ தவத்தில் ஆழ்ந்திருந்தார். அவரை, தவத்திலிருந்து எழும்பச் செய்து, நாட்டுநிலையைக்கூறி

பஞ்சப்பிணியைப் போக்கவேண்டும். தவம் கலைக்கப்படுவதால் முனிவர் கோப முற்றாரானால் பலன் எதிர்மறையாகவும் நேரலாம். எனவே முனிவரை அணுகி நாடு பற்றிக் கூறக்கூடியோர் யாரேனுமிருப்பின் வருமாறு மன்னன் முரசறைந்து அறிவித் தான். முனிவரை அணுக எல்லோருமே தயங்கினர்.

இந்த நிலையைக் கண்ணுற்ற தேவரடியாள் ஒருத்தி நாட்டின் நன்மை கருதி இப்பணியில் ஈடுபட முன்வந்தாள்.

முனிவரை எப்படித் தவத்தி லிருந்து எழுப்புவது? அவள் அதற்கு ஏதா வது உபாயத்தைக் கண்டறிய முனைந் தாள். அவரைக் கவனித்த போது தான் தவமிருந்த இடத்தில் நின்ற மரத்தின் பழுத்தல் இலைகளையே அவர் உண வாகக் கொள்வதை அவதானித்தாள். அந்த இலைகளில் அவள் உப்பைத் தடவிவிட்டாள். உப்புடன் கூடிய இலை களை உண்டதனால் அவர் தவத்தி லிருந்து எழுந்தார். அவரிடம் அந்தப் பெண் நாட்டின் பஞ்சநிலையை விளக்கி நாட்டு மக்களை இரட்சிக்குமாறு வேண்டினாள்.

அதைக் கேட்ட முனிவர் மாகா ளேஸ்வரரின் கோவிலுக்குச் சென்று நாட் டின் நன்மை கருதி யாகமொன்றைச் செய் யத் தொடங்கினார். அங்கு அப்பெண்ணின் உருத்திரதாண்டவ நிகழ்ச்சிக்கும் ஒழுங்கு செய்தார்.

சிவனே தாண்டவமாடுவதாக அவர் பார்த்தும் பரவசமடைந்திருக்கையில், திடீரென ஆட்டம் இடைநடுவில் நின்றது. அவளது காலில் கட்டியிருந்த சதங்கை அறுந்து உதிர்வதை அவர் கண்டார். இறைவனின் தாண்டவம் நிற்கலாமா? கூடாதே. அவரது மனம் பதைபதைத்தது. ஓடிச்சென்று அவற்றைப் பொறுக்கிக் கோர்த்து அவளது காலில் அணிவித்தார். “இறைவனின் நடனம் தொடரவேண்டும்” அதுதான் அவரது ஒரே நோக்கம்.

ஆனால் சுற்றிவரப் பார்த்திருந் தோரின் பார்வை வேறு வகையாக இருந் தது. அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தது உருத்திர தாண்டவத்தையல்ல. ஓர் அழ கிய பெண்ணின் நடனத்தை அவர்கள் முனிவரைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித் தனர்.

முனிவர் அதனைப் பார்த்தார். ‘இவர்களால் ஆண்டவனில் இலயிக்க முடியவில்லையே. அதன் பயனை அனுப விக்கட்டும்’ என வேதனையோடு முடி வெடுத்தார். அந்த வேதனையோடு அவர் கானகத்திற்குப் புறப்பட்டபோது அது நடந்தது.

இறைவனாலும் அதனைப் பொறுக்கமுடியவில்லை. முனிவர் வணங்கி வந்த சிவலிங்கத்தின் தலை வெடித்து, உடைந்த பகுதி ஐந்துமைல்களுக்கப்பால் போய் விழுந்தது. அந்த இடம் கழுவெளி என்று அழைக்கப்படுகிறது.

இக்கதை பல்வேறு அறநெறிக் கருத்துக்களைப் போதிப்பதோடு ஞானிய ரதும் மற்றையோரதும் நோக்கிலுள்ள வேறு பாட்டையும் விளக்குகிறதல்லவா?

---

நீங்கள் ஏதாவது தவறுசெய்தால், அவை உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் ஆழ்ந்து போயிருக்கும்; ஆனால் அவை அழிந்து போய்விட மாட்டா. உரிய காலத்தில் அவை மறுபடியும் வெளிவரும்.

**வலிமையின் ரகசியம் நம்பிக்கை.**

உ

(தொடர்ச்சி...

# மாணிக்கர் மாலை

*பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்கள்*

இறைவன் புகழ்பாடுவதையே தொழிலாகக் கொண்ட திருவாதவூரர். தமிழிலே மாணிக்கமான வார்த்தைகளை உரைத்தெடுத்துப் பாடியதிறத்தை இருபாடல்களிலே வெளிப்படுத்தியுள்ளார்.

சிந்தனை நின்தனக்காக்கி நாயினேன் தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்களார
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையேயுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனியனேற்கே

திருச்சதகம் 26

மணிவார்த்தை - மணிமணியான பொருளுள்ள அழகான வார்த்தை - (சொல்) தாமரைக் காடனையமேனி, சர்வ வியாபகமானநிலை. மாலை - விருப்பம், இரண்டுமிலி - இரண்டும் கெட்டநிலை.

பேசும் பொருளுக் கிலக்கியமாம் பேச்சிறந்த
மாசில் மணியின் மணிவார்த்தை - பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து

பண்டாய நான்மறை 7

வார்த்தை - வாக்கு, சொல், பதம், வாய்மொழி, வசனம், செய்தி விடை, இலக்கியம் இலக்கணத்துக்கு உரியதாய் அமைதல் நம்மாழ்வாரும் வாய்மொழி வாசகம் என்ற பாவனையை எடுத்தாண்டுள்ளார்.

இதுவரை திறமான சொற்களை எடுத்துப் பயன்படுத்தி வார்த்தைக்கு வார்த்தை சொல்லுக்குச் சொல் பாட்டுக்குப் பாட்டு மணிமணியாக அமைத்து ஆக்கிய திருவாசகக் கட்டுமானம் கண்டோம். வேறுயாரும் எடுத்தாளாத உத்தி இது. இதனாலேதான் திருவாச கத்தை மாணிக்கவாசகம் என்கிறோம். பாடியவரையும் மணிமொழியார் மணிமொழி, மாணிக்கவாசகர் என அழைக்கின்றோம். இனி மாணிக்கர் வாக்கிற்றவழ்ந்த மணி மொழிகளைப் பற்றிச் சிந்திப்போம்.

மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கும்

திருவண்டப் பகுதி 124

மரகதக்குவாஅல் - மரகதக்கூட்டம், பிறக்கம் - பிரகாசம். குவா - திரட்சி. மாமணிப்பிறக்கம் - பெரியமணியின் பிரகாசம்

தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயங்காதே.

கூடல் இலங்கு குருமணி போற்றி

போற்றித்திரு அகவல் 91

குருமணி - பரமாச்சாரியன்

மாசற்ற மணிக்குன்றே எந்தாய் அந்தோ

திருச்சதகம் 24

மாசற்ற குற்றமில்லா, மணிக்குன்றே - ஒளிரும் மலையே

மணியே உனைக்காண்பான்

அவாவி நிற்கும் அன்பிலேன்

மணியே - அருட்சோதியே

திருச்சதகம் 54

மறுத்தனன் யான்உன் அருளறி

யாமையில் என்மணியே

நீத்தல்விண்ணப்பம் 6

என்மணியே என்ஒளி மயமான சிவனே

யானுன் மணிமலர்த்தாள்

வேறுபட்டேனை விடுதிகண்டாய்

மேல் 11

மணி மலர்த்தள் - அழகானமலரடிகள்

வானக் கொழுமணியே

மேல் 26

வானக் கொழுமணியே - சிதாகாசச் செழுஞ்சுடரே

கழுமணியே இன்னும் காட்டுகண்டாய்

மேல் 27

கழுமணி கழுவி யெடுத்த மிளிரும் மணியே

பாடிற்றிலேன் பணி யேன் மணி

யெனத்தக்காய்க்கு

மேல் 45

மணி - மாணிக்கம்

மையமர் கண்டனை வானநாடர்

மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை

திருப்பொற்சுண்ணம் 12

மாணிக்கக்கூத்தன் - நடராசன், அழகான ஆடல் வல்லான்

ஊழிமுதற் சிந்தாதநன்மணி நல்லமணி

தோணோக்கம் 13

கழற் சேவடி யென்னும்

பொருளைத் தந்திங் கெனையாண்ட

பொல்லாமணியேயோ

ஆசைப்பத்து 1

பொள்ளுதல் - தொளைத்தல், உளிகொண்டு செதுக்குதல், பொள்ளாமணி - பொல்லாமணியாயிற்று, பொல்லாப்பிள்ளையாரும் இப்படிமாறியதே - பொல்லாமணி - தொளையிட முடியாத மணி.

முத்து மாமணி மாணிக்கவயிரத்த
பவளத்தின் முழுச்சோதி

அதிசயப்பத்து 7

மாமணி - உயர்ந்த இரத்தினம்
மாணிக்கம் - நவமணிகளில் ஒன்று
புடைபட்டிருப்பது என்று கொல்லோ என
பொள்ளா மணியைப் புணர்ந்தே

புணர்ச்சிப்பத்து 1

பொள்ளாமணி - தொளைக்கப்படாதமணி
எப்போதும் ஏதாமணியே என்றென்றேத்தி
ஏதாமணியே - ஞானஒளியே

மேல் 9

வம்பனேன் தனை ஆண்டமாமணியே
மாமணியே - பெரியமணியே வாழாப்பத்து 2
அருமா மணிமுத்தே - பிரார்த்தனைப்பத்து
அருமாமணி - சுயமாய் ஒளிரும் சோதிமணி
அம்மையே அப்பா ஒப்பிலாமணியே - பிடித்தபத்து2
ஒப்பிலாமணியே - ஒப்பற்ற இரத்தினமே
முத்தனையானே மணியனையானே - எண்ணப்பதிகம் 4
மணியனையான் - மணிபோன்றவன்
நாடகத்தால் நின்னடியார் போல் நடித்து
ஆடகச்சீர் மணிக்குன்றே - சதகம் 11
மணிக்குன்று - மாணிக்கமலை

ஆகமாணிக்கக் கூத்தனைப் பாடியமணிவாசகத்தை நாம் தினமும் ஓதி உய்திகாண்போமாக. இந்த ஒப்பீட்டு நோக்கில் எல்லாம் மாணிக்கமே.

அம்பலப் பாட்டே அருட்பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு

வள்ளலார்.

(முற்றும்)

---

ஒரு முட்டாள் தன்னை முட்டாள் என்று அறிந்திருந்தால், அவனை ஓரளவிற்கு அறிவாளி என்று ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒரு முட்டாள் தன்னை அறிவாளி என்று நினைத்தால் அவனே உண்மையில் முட்டாளாகின்றான்.

**நம்பிக்கையால் மக்கள் கடவுள் ஆகலாம்.**

உ

# பார்முழுதும் போற்றும் பரமஹம்சர்

## (19.02.2007 சனிக்கிழமை 172 ஆவது ஜெயந்திதினம்)

திரு சி. சிவமோகன் அவர்கள்

மனிதவடிவில் உதித்த அவதார புருஷர்களில் முதன்மையாகக் கணிக்கப் பட்டு அனைவராலும் வழிபடப்படுபவர் குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர். ஓர் உயிருக்கு எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்களை அதாவது பிறப்புக் களை எடுக்கவேண்டியுள்ளது. அப்படி எடுக்கின்ற எம்முடன் ஒவ்வொரு ஜென்மத் தினதும் நல்வினை, தீவினைகளின் படிவு கள் சமஸ்காரங்களாக எம்முடன் ஒட்டிக் கொண்டுள்ளன. இப்படிப்பட்ட நிலை யிலேயே பூர்வஜென்மப் புண்ணியத்தின் பலனாக மனிதப்பிறவி நமக்கு வாய்க் கின்றது. இந்த லௌகீக உலகில் புற உலக உணர்வுகளின் தாக்கத்தால் முழுமையாக ஈர்க்கப்பட்ட நாம், எம்மைப் படைத்த பரம்பொருளை நினைக்க நேர மில்லாது தவிக்கின்றோம். பொதுவாகவே துன்பமான சூழ்நிலையிலும், ஒரு தேவையை வேண்டியும், ஒரு கடமை போலவுமே நாம் கடவுளைத் தேடிக் கோயி லுக்குப் போகின்றோம் அல்லது மனதில் நினைக்கின்றோம். பூர்வஜென்ம புண்ணியங் களால் ஒருசிலர் இதில் விதிவிலக்கு. சம்ஸ்காரங்களாலும், புற உணர்வுகளா லும் சூழப்பட்ட எம்மால் இறைவனை காணவோ, அடையவோ முடியாது. அதற்கு குருதேவர் கூறும் தீவிர வைராக்கிய பக்திதேவை.

ஆனால் உலகைப் படைத்த பரம்பொருளுக்கு இவை புரியாதா என்ன? உலக ஜீவராசிகளை கடைத்தேற்றுவதற் காகவே காலந்தோறும் பல மனிதவடிவில் பல அவதார புருஷர்கள் தோன்றுகின்றனர். "அவதார புருஷர்களிடம் கடவுளின் சக்தி மிக அதிகமாக வெளிப்படுகிறது. அவதார புருஷர்கள் உயிரோடு இருக்கும்போது அவர்களை வழிபட்டு, தொண்டு புரிய வேண்டும். அவதார புருஷரை அனைவரும் அறிந்துகொள்ளமுடியாது. உடல் எடுத் தாலே நோய், துக்கம், பசி, தாகம் முதலி யவை வந்துவிடும். இவற்றை அவதார புருஷர்களிடமும் காணும்போது, சாதாரண மக்களுக்கு அவர்களும் நம்மைப் போன்ற சாதாரணமானவர்கள் தானே என்ற எண் ணம் வந்துவிடுகிறது" என்கிறார் ஸ்ரீராம கிருஷ்ணர். இவர்கள் குருவாக இருந்து எம்மைத் தடுத்தாட்கொண்டு, ஆன்மீக வழிப்படுத்தி ஈற்றில் எமக்குப் பரம்பொரு ளைக் காட்டி அவர்களும் பரம்பொருளில் ஐக்கியமாகிவிடுவர். குருதேவர் ஸ்ரீராம கிருஷ்ணர், பகவான் ஸ்ரீரமண மகரிஷி, எமது மண்ணில் நடமாடிய ஞான வடிவாம் யோகர்சுவாமிகள் போன்றோரை மனதில் நினைத்தாலே கண்கள் குளமாகி ஆன்மீக பரவசநிலை ஏற்படும். எமது துன்பங்கள் பறந்தோடும். தோற்றத்தில் மிகமிக எளிமையான இவர்கள் மிகப்பெரிய ஞானி களாக இருந்து, அதை எமக்கும் வழங்கு கின்றார்கள்.

"வேர்த்தால் குளித்து, பசித்தால் புசித்து, விழிதுயின்று, பார்த்தால்

உனது பலவீனத்தைப் பறைசாற்றாதே.

உலகத்தவர் போல் இருப்பவர் பற்று அற்றவரே" என்கிறார் பட்டினத்தார். இதே போல "மூட ஜனங்களில் பலர் பிரம்ம ஞானியின் தோற்றத்தைப் பார்த்து, அவரைத் தேகம் உடையவன் என்று எண்ணுகிறார்கள். பிரம்மவித்தான உத்தமன், சாட்சாத் சிவனே" என்கிறது ஆத்மோப நிடதம். மனிதன் கல், செம்பு, மரம், விலங்குகள் போன்றவற்றை எல்லாம் வணங்குவான் ஆனால் மனித உடல்தாங்கிவரும் மகான்களைக் கடவுளாக ஏற்கமறுப்பான்; அவமதிப்பான் இது காலங்கள் தோறும் நடைபெறுகிறது. இதைத்தான் கிருஷ்ண பரமாத்மா கீதையில் "மானிடவடிவம் எடுத்துள்ள என்னையும், எனது உயர்ந்த இயல்பையும், அனைத்து உயிர்களுக்கும் இறைவனாகவும், மூலத்துக்கும் மூலமான ஆதிமூலமாகவும் நான் இருப்பதையும் உணராத மூடர்கள் என்னை மானிடர் என எண்ணி அவமதிக்கிறார்கள்" என்கிறார். ஞானிகள் எப்போதும், எல்லா இடங்களிலும் இருந்துகொண்டு, பிரம்ம ஞானத்தை வழங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களைக் காண்பதும், இனங்கண்டு கொள்வதும், அருளாசி பெறுவதும் பிறவிகள் பலவற்றில் நாம் செய்த புண்ணியப் பலனாலேயே கிட்டுகிறது. "ஒருவருக்கு சத்சங்கமும், சற்குருவும் கிடைப்பது பகவத் கிருபையாலே" என்கிறது நாரதபக்தி சூத்திரம்.

இந்தியாவில் கல்கத்தாவின் காமார்புகூர் என்ற இடத்தில் 18.02.1836இல் ஒரு ஏழைப் பிராமண குடும்பத்தில் கதாதரர் என்ற இயற்பெயருடன் அவதரித்தவர் குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர். இவரின் பிறப்பை சிவனும், விஷ்ணுவும் இவரது தாய்க்கும், தந்தைக்கும் தனித் தனியாக உணர்த்திவிட்டனர். எழுத வாசிக்கவோ, கையெழுத்துப் போடக்கூடத் தெரியாதவர் குருதேவர். தட்சிணேஸ்வரம் காளி தேவிக்குப் பூஜை செய்யும் பாக்கியத்தைக் காலம் கொடுத்தது. காளிதேவியின் தாசனாகி, அவளிடம் மற்றவர்கள் இவரைப் பைத்தியம் என்று கூறுமளவு தீவிர வைராக்கிய பக்தி கொண்டதால் தரிசனம் கிடைக்கப்பெற்றார். தோதாபுரி, பைரவி பிராம்மணி போன்றோரைக் குருவாகப் பெற்று தாந்ரீகசாதனைகள், அத்வைத பேதாந்த ரகசியங்களைக் கற்று, சுய சாதனைகளை திறம்படச்செய்து பரமஹம்சரானார். அன்னப்பறவை எப்படி பாலை நீரிலிருந்து பிரித்தெடுக்குமோ, அதுபோல பரமஹம்சர்களும் உலகியலில் இருந்து இறையுணர்வை முழுமையாக பிரித்தெடுத்து விடுகின்றனர். 16.08.1886இல் தனது ஐம்பது வருடகால மனித உடல் தாங்கிய வடிவைத் துறந்து பிரம்ம மயமானார். அப்படி மறையும்போது தமது முதன்மைச் சீடரான சுவாமி விவேகானந்தரிடம் "யார் ராமனோ, யார் கிருஷ்ணனோ அவரே இந்த ராமகிருஷ்ணர்" என்பதை முழுமையாக உணர்த்தி, அவர்மூலம் தமது துறவிச் சீடர்களையும், இல்லறச் சீடர்களையும், எம்மையெல்லாம் வழி நடத்தும் பணியை ஒப்படைத்தார். அந்த வகையில் உலகளாவிய ரீதியில் ராமகிருஷ்ண மடங்கள் நிறுவப்பட்டு எத்தனை ஆயிரம் துறவிகள், எத்தனை ஆயிரம் பக்தர்கள் ஆன்மீகப் பணியும், சமூகப் பணியும் ஆற்றுகின்றனர். குருதேவரின் சீடர்களில் அவரது மூத்தமகன் என்று போற்றப்படும் பிரம்மானந்தர், "நீருள்ள பாத்திரத்திலிருந்து நீரை ஊற்றினால், நீரின் இடத்தை காற்று எடுக்கும். ஆனால்

அப்படியெனின் அங்கு ஏற்கனவே காற்று இல்லை என்றல்ல. காற்று நீருடன் கலந்திருந்தது. அதுபோல எமது மனதும் புறவுணர்வுகளின் தாக்கங்களாலும், சச்சிதானந்த சொருபத்தாலும் நிரப்பப்பட்டுள்ளது. புறவுணர்வை நீக்க அங்கு இறையுணர்வு குடிகொள்ளும் அப்போது உனது இஷ்ட தெய்வத்தைத் தியானிக்க அவர் அங்கு தோன்றியருளுவார்" என்கிறார்.

குருதேவரின் போதனையின் சாராம்சம் என்னவெனில் "எத்தனை எத்தனை உருவங்கள், எத்தனை எத்தனை நாமங்கள், உள்ளது. உள்ளது ஒன்றே! உள்ளது ஒன்றே நீ ஒன்றே இறைவா!" என்பதாகும். வேதாந்தத்தையும், சைவசித்தாந்தம் பிழிந்து, படிப்பறிவற்ற பாமரமக்களும் புரியும் வண்ணம் அவர் அருளிய அமுத மொழிகள் மூன்று பாகங்களாக அவரது நேரடி இல்லறச்சீடரான மகேந்திர நாத்குப்தரால் உடனுக்குடன் எழுதப்பட்டு, தற்போது புத்தகங்களாக எல்லா மொழிகளிலும் வெளிவந்துள்ளன. அவை காலத்தால் அழியாதவை! தூய அன்னையான ஸ்ரீசாரதா தேவியார் "குருதேவரின் அமுத மொழிகளைப் படிப்பவர் வேறெதனையும் படிக்கத் தேவையில்லை" என்கிறார். குருதேவரிடம் தாம் உடனிருந்து அனுபவித்த இன்பத்தை மற்றோரெல்லாரும் அனுபவிக்கும் வண்ணம் இப்பணியைச் செய்த மகேந்திரநாத் குப்தரையும், துறவிகளையும் சுவாமி விவேகானந்தர் பெரிதும் பாராட்டினார். " உனது ஒரு கையை இறைவன் மீது வை! மறுகையால் உலகக் கடமைகளைச் செய்து கொண்டிரு! இரு கைகளால் இறைவனைத் தொழும் காலம் வரும் போது, இருகைகளையும் இறைவனை வழிபடப் பயன்படுத்தலாம்" என்ற குருதேவரின் போதனையும், "பலாச்சுளையை உரிக்கும்போது பிசின் ஒட்டிக்கொள்ளாதிருப்பதற்காக எண்ணெய் தடவிக்கொள்வது போல, ஆன்மீகம் என்ற எண்ணெயை தடவிக் கொண்டு, உலகவாழ்வில் நீ இருப்பாயேயானால் அவை உன்னைப் பற்றிக்கொள்ள மாட்டாது!" என்ற போதனையும் மிக உயர்வானவை.

ஒப்புயர்வற்ற குருதேவரின் ஜெயந்தி தினத்தில் யுத்த அனர்த்தங்களாலும், ஆழிப்பேரலை அனர்த்தத்தாலும் உயிர்களையும், உறவுகளையும், வீடுவாசல் போன்ற உடமைகளையும் இழந்து தவிக்கும் அனைவருக்கும் ஆத்மசாந்தி வேண்டி, குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரை தனது சாம்பலிலிருந்து எழுந்துவரும் "பீனிக்ஸ்" பறவைபோல புத்துயிரும், புதுவாழ்வும் பெற்று இன்பமுடன் வாழ அருள்புரியப் பிரார்த்திக்கின்றோம்.

"தூய ஆத்மாக்களுக்குச் செய்கின்ற சேவை
தெய்வத்திற்குச் செய்கின்ற சேவைக்கு நிகரானது!"

"நீ பரோபகாரமாகச் செய்கின்ற சத்கர்மங்கள்
எல்லாம் உண்மையில் உன்னைப் பக்குவப்படுத்தல் பொருட்டேயாம்!"

*குருதேவர் ஸ்ரீ. ராமகிருஷ்ணபரமஹம்சா*

தூய ஆசைகளுக்கு அடிமைகளாகாதீர்கள்.

உ

(தொடர்ச்சி....

# தவமுனிவனின் தமிழ் மந்திரம்

*சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்கள்*

மக்கள் நல்வழியினின்றும் தவறாமல் நடப்பதற்காகப் பல அறவுரைகளை அழகுத் தமிழிலே குழைத்து ஊட்டுகின்றார் திருமூலர். இந்த அறவுரைகள் மூன்று வகைப்படும். பாவம் செய்யாதீர்கள் என்று கூறுவது மனித தருமத்துக்கு அடிப்படையான உபதேசம். பாவங்களைச் செய்யாமல் இருப்பதோடு புண்ணியச் செயல்களைப் புரியவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றார். இவற்றுடன் இறைவனுடைய பேரின்பத்தை இந்த உடம்போடு இருக்கும் போதே பெற்று அனுபவிக்க வேண்டுமெனவும் கூறுகின்றார். வாழ்வில் மக்கள் விலக்கவேண்டிய தீய செயல்களை எடுத்துக் கூறுகின்ற தவயோகி புண்ணியச் செயல்கள் சிலவற்றை வரிசைப்படுத்திக் கூறி இவற்றை நாள்தோறும் செய்தல் வேண்டும் எனவும் உபதேசிக்கின்றார்.

அகத்திலே இருக்கின்ற ஞான காரியமாகிய இருளைப் போக்குவதற்கு அக்கினி காரியம் துணை செய்கிறது. நமது அந்தக்கரணங்கள் நான்கினையும் ஞானத்தை உணர்த்தும் கரணங்களாக மாற்றுவதற்கு ஐதரோபநிஷத் வழிகூறுகிறது. இதனையே திருமூலரும் அக்கினி காரியம் என்னும் பத்துப் பாடல்களின் ஊடாக விளக்குகின்றார். ஜீவபோதத்தைப் பலியிட்டு ஞானபோதத்தைப் பெறுவதற்கு அக்கினி காரியத்தில் வரும் பாடல்கள் வழிகாட்டுகிறது. நமது அகத்தைச் சிவத்தோடு சேர்ப்பதற்கு மனிதனிடத்தில் உள்ள அறிவுப் பிழம்பைப் பிரகாசிக்கச் செய்தல்வேண்டும். புறத்து அக்கினியானது ஆக்கவும் அழிக்கவும் வல்லது. இவ்வாறு அகத்திலுள்ள சிவாக்கினியும் அனைத்தையும் செய்யும் தன்மை உடையதாகும். சிவஞானச் செல்வமே சிறந்த செல்வம் இதை நாம் மூலாக்கினியை வழிப்படுத்தும் முறையினால் அடைய முயலவேண்டும். அக்கினி காரியம் என்பதன் கருத்து சிவஞானம் பெறுவதேயாகும்.

வேதங்கள் இறைவனை ஒளி வடிவாகவும் ஒலி வடிவாகவுமே காட்டுகின்றன. ஒளி வடிவாக இருக்கின்ற இறைவனை அக்கினி வழிபாட்டிலும் ஒலிவடிவாக இருக்கின்ற இறைவனை மந்திரத்தாலும் வேதகால ரிஷிகள் துதித்தார்கள். ஓமத்திற்குரிய தலைவன் சிவபெருமானே எனத்தவயோகி கூறுகிறார் ஒளிமிக்க சுடராகி என் உள்ளத்தில் எழுந்தருளியிருப்பவனும் அவனே என்கிறார். ஓமத் தலைவனாகிய சிவன் ஞானத் தலைவனாகவும் திகழ்கிறான். பேரறிவுப் பெருஞ்சுடராய் உள்ளத்தே வீற்றிருக்கின்ற ஒளிப் பொருள்களுக்கு ஒளி கொடுக்கும் முழுமுதற் தெய்வமாகவும் சிவன் திகழ்கிறார் என்பதை அக்கினி காரியம் என்ற தலைப்பில் வரும் பின்வரும் பாடல் விளக்குகின்றது.

ஒண் சுடரானை உவப்பு இலி நாதனை
ஒண்சுடர் ஆகி என் உள்ளத்து இருக்கின்ற

கண்சுடரோன் உலகு ஏழும் கடந்த அத்
தண்சுடர் ஓமத் தலைவனும் ஆமே.

ஒழுக்கமில்லாதவர்களிடம் இருக்கும் கல்வியினாலும் அறிவினாலும் ஒரு பயனும் இல்லை. கல்வியின் பயன் அறிவு. அறிவின் பயன் ஒழுக்கம். ஒழுக்கமற்றவர்களுடைய கல்வியறிவு ஒளியற்ற விழியையும், மணமற்ற மலரையும், உயிரற்ற உடலையும் போன்றதாகும். ஒழுக்கமற்றவர்கள் எத்தனை தான் அறநூற்பொருட்களை விரித்து உரைத்தாலும், எவ்வளவு தான் இனிமையாகப் பேசினாலும் அவர் கூற்று பிறர்க்கு நலம் செய்யாது. அவர் கூறும் விஷயம் மிகவும் உயர்ந்ததாயினும் அதனை உலகமும் கொள்ளாது. ஒழுக்கம் உடையவர்களிடந்தான் அறவுரைகளைக் கேட்கவேண்டும். அவர் கூறும் உரையே மெய்ந்நூற் பொருள்களை விளக்கி பெரும் பயன் விளையச் செய்யும். உலகியலாகிய இருளை அகற்றுவதற்கு கல்வியறிவே விளக்கெனவும் அவ்விளக்கிற்கு அருளே நெய்யெனவும் அந்த நெய்யைத் தரும் பாலே ஒழுக்கமெனவும் கூறுவர். இதனால் ஒழுக்கமுடையவரே அருள் உடையவராவார். அருள் உடையவரே அறிவு உடையவராவார். அறிவு உடையவரே உலகிருளைக் கடந்து உய்வடைவார்கள்.

பாசம் ஒழிந்து தமது உள்ளத்திலுள்ள சிவ சொருபத்தைப் பார்ப்பவர்களே பார்ப்பார் ஆவார். அந்தணர் என்பவர்கள் வேதம் ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு தொழில்களைப் பூண்டவர்கள் என்பதை "அந்தணராவோர் அறுதொழில் பூண்டுளோர்" எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. சிவாலயக் கிரியைகளைச் செய்யும் சிவாச்சாரியாருக்கு இருக்க வேண்டிய தகுதிப்பாடுகளை காரணாகமம் தெளிவாகக் கூறுகிறது. சிவாசாரியார் குருலட்சணம் நிறைந்தவராய் சமயவிசேட நிர்வாண ஆசார்யபிஷேக தீட்சிதராய், ஆத்மார்த்த சிவபூஜா துரந்தராய் ஆகமக்கிரியா வல்லுணராய், குரு சிவாக்கினி கடவுள் ஆகிய மூன்றிலும் நீங்காத பற்றுடையவராய் காம குரோதங்களில் இருந்து விடுபட்டவராய் புலன்களை வென்றவராய் இருத்தல் வேண்டுமெனக் காரணாகமம் குறிப்பிடுகிறது. வழிபடும் அடியவர்களிடம் பக்தி உணர்வை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு சிவாசாரியாரிடமே உள்ளது. அர்ச்சகருடைய பிரபாவத்தினால்த்தான் சிலை சங்கரனாக மாறுகிறது (அர்ச்சகஸ்ய ப்ரபாவேன சிவாபவதி சங்கர) மந்திரம், தந்திரம், கிரியை, முத்திரை, பாவனை ஆகியவற்றை ஆசாரியார் கொண்டிருக்கவேண்டும். (மந்த்ர தந்திர க்ரியா முத்ரா பாவநா பாவ கா்பித) எனவும் காரணாகமம் குறிப்பிடுகின்றது.

தத்துவ நூல்களைக் கற்பதனாலும் கேட்பதனாலும் வாய் ஞானத்தாலும் மட்டும் இறை உண்மையை உணரமுடியாது. வேதியர் சிலர் வேதாந்தங் கேட்பர். தாம் அறிந்த கருத்துக்களை அனைவருக்கும் கூறுவர். ஆனால் பொருட்களின் மேல் உள்ள வேட்கையினை ஒழியமாட்டார்கள். அவ்வேட்கை ஒழிந்து அவா நீங்குதலே உண்மையான வேதாந்த நிலையாகும். வேட்கை ஒழிந்து பற்றுக்கள் நீங்கியவரே வேதாந்த தத்துவத்தை உணர்ந்தவர்கள் ஆவார்கள் என்பதை

வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்தமாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கை விட்டாரே

எனத் திருமந்திரம் கூறுகிறது.

சத்தியம், ஆன்மஞானம், பொறியின்பத்தை விட்ட மெய்யுணர்வு, இறையன்பு, கடவுள் ஒருவர் உண்டென்ற தெய்வநம்பிக்கை இவை அனைத்தும் உள்ளவரே பிராமணர்கள் ஆவார்கள். இவைகள் எதுவுமின்றி ஐம்புலநுகர்விலே ஈடுபட்டு மருள்கொண்டு இருளுக்கு அடிமையாகி பித்தேறி மாயையில் உழலும் மூடர்கள் பிராமணர்கள் ஆகமாட்டார்கள். அந்தணர்கள் யார் என்பதையும் அவர்களுக்குரிய நெறி எது என்பதையும் பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

சத்தியம் இன்றித் தனி ஞானம் தானின்றி
ஒத்த விடயம் விட்டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரனுண்மையின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே

நாட்டை ஆளும் அரசன் தெய்வத் தன்மை உடையவன் என்ற கருத்து இருக்கு வேதத்திலே காணப்படுகிறது. பூமிக்குத் தேவன், மக்களுக்குத் தேவன், என்ற கருத்தில் அரசர்களை பூதேவ, நரதேவ என்று குறிப்பிடுவதைச் சாசனங்களிலே காணலாம். சிறப்புமிக்க அரசர்களில் நான் திருமாலைக் காண்கிறேன் என்பதை நம்மாழ்வார் "திருவுடை மன்னரைக் காணில் நான் திருமாலைக் கண்டேன்" எனத் தனது திருவாய்மொழிப் பாடலில் கூறுகிறார். தனது நாட்டுக் குடிமக்களை நல்ல முறையில் காப்பாற்றுகின்ற அரசனை மக்கள் அனைவரும் கடவுளாகவே போற்றி வணங்குவார்கள் என்பதை,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்
மக்கட்கிறையென்று வைக்கப்படும்

எனத் திருக்குறள் கூறுகிறது.

குடிமக்களின் அன்பையும் அபிமானத்தையும் பெறாத அரசனுக்கு வீழ்ச்சிப்பயம் உண்டு என்று வேதங்கள் கூறுகின்றன. அரசன் தருமநெறியில் நின்று தவறுவான் ஆயின் நாட்டில் பல இயற்கை அழிவுகள் ஏற்படும். கொடிய பஞ்சம் தலைவிரித்தாடும் நாடு காடாகும் என அறநூல்கள் அனைத்தும் எடுத்துக் கூறுகின்றன.

நாட்டை ஆளும் அரசனுக்கு கல்வி மிகவும் இன்றியமையாதது எனத் திருமூலர் வற்புறுத்துகிறார். கல்வி அறிவில்லாத அரசனும் யமனும் ஒத்த தன்மையுடையவர் எனக் கூறுகின்றார். உடலில் இருந்து உயிரைப் பிரித்துச் செல்லும் காலன் மக்களுக்கு மரணத்தை ஏற்படுத்துவான். கல்வி ஞானம் இல்லாத முரட்டு

ஒரு வினாடிப் பொறுமை பத்துவருட சுகம்.

அரசனும் குடிமக்களைத் தக்கவண்ணம் காப்பாற்றாமல் வருத்தி மாயும்படி செய்வான். முதலில் காலனும் கல்லா அரசனும் நேரொப்பர் என்று கூறிய திருமூலர் அடுத்த வரியில் கல்லா அரசனிலும் பார்க்க காலன் மிக நல்லவன் எனக் கூறுகிறார். காலனுக்குத் தருமராசன் என்ற பெயர் உண்டு. இறைவனுடைய பக்தர்களாகிய நல்லவர்களிடம் காலன் போக மாட்டான். மார்க்கண்டேயரிடம் காலன் அணுக முடியாமல் இருந்ததைப் புராணங்களினூடாக அறியமுடிகிறது. அறிவில்லாத அரசன் அறிநெறியைக் கடைப்பிடிக்க மாட்டான். நியாயம் அநியாயத்தை உணர மாட்டான். தனக்குப் பிடிக்காதவர்களைக் கொல் என்று கட்டளையிடுவான். ஆனால் யமன் நல்லவர்களை நெருங்கமாட்டான். அவர்களுக்குத் துன்பம் தரமாட்டான் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிக நல்லன்
கல்லா அரசன் அறம் ஓரான் கொல் என்பான்
நல்லாரைக் காலன் நணுக நில்லானே

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் தினசரி வாழ்க்கையில் செய்யவேண்டிய கடமைகள் சிலவற்றைத் தவயோகி எடுத்துக் கூறுகின்றார். ஒவ்வொருவரும் தன்னுடைய ஆன்ம ஈடேற்றத்திற்காக நாள் தோறும் வழிபாடு செய்தல் வேண்டும். வழிபாடு செய்வதற்கு பூமரத்தின் பச்சை இலையே போதுமானது. எல்லாத் தெய்வங்களும் வீற்றிருந்து அருள்புரியும் பிராணியாகப் பசு திகழ்கிறது. "கோமாதா எங்கள் குலமாதா" என இந்துக்கள் பசுவைப் போற்றி வருகிறார்கள். பசுவிற்கு ஒருவாய் உணவு கொடுப்பது யாவர்க்கும் ஆகக் கூடிய எளிய செயல் இது ஜீவகாருண்யத்தை வளர்க்கிற தினசரி ஒழுக்க முறையாக உள்ளது. பிறருக்கு ஒருபிடி உணவைத் தானமாகக் கொடுப்பது அறங்களில் சிறந்த அறமாகும். நமது நாட்டில் பிடி அரிசித் திட்டத்தில் வளர்ந்த அற நிலையங்கள் பல உண்டு. பிறரிடம் கடுஞ் சொல் பேசாமல் இனிய வார்த்தைகளைப் பேசுவது எல்லோராலும் செய்யக்கூடிய இலகுவான அறம் ஆகும். இவ்வாறு இந்துப் பண்பாட்டின் அடிப்படை அறங்கள் அனைத்தையும் திருமந்திரம் பின்வரும் பாடலின் ஊடாக விளக்குகிறது.

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே

அறம் செய்வான் பெறும் பேற்றினைப் பற்றி ஒன்பது பாடல்களில் கூறிய திருமூலர் அறம் செய்யாதவனின் இயல்பினைப் பற்றி பத்துப்பாடல்களில் குறிப்பிடுகின்றார். அறம் செய்யாதவர்கள் இம்மையில் பல துன்பங்களை எதிர்கொள்வார்கள். உடல் நோய்கள் பலவற்றினால் தாக்கப்படுவார்கள். இருமல், இரத்தம் குறைவதனால் வருகிறநோயான இரத்த சோகை, சளியின் தாக்கத்தினால் ஏற்படுகின்ற காசநோய், உஷ்ணத்தினால் உண்டாகும் உபாதைகள் எல்லாம் தருமம்

செய்யாதவர்களைத் தேடிவரும் நோய்களாகும். இயற்கை சக்திகளினால் ஏற்படுகின்ற இடி, மின்னல் போன்ற தாக்குதல்கள், விஷம் தீண்டுதல், வயிற்றுக்கட்டி தொண்டையில் ஏற்படும் நோய்கள் என்பன அறம் செய்பவர்களை நெருங்கவே மாட்டாது என்பதனைத் தவயோகியின் திருமந்திரம் பின்வருமாறு கூறுகிறது.

இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்
தருமம் செய்யாதவர் தம்பாலது ஆகும்
உரும், இடி, நாகம், உரோணி கழலை
தருமம் செய்வார் பக்கல் தாழகிலாவே

தருமத்தையும் தருமம் செய்யும் முறைகளையும் எடுத்தோதிய திருமூலர் தொடர்ந்து வரும் பத்துப் பாடல்களில் இறைவனிடம் அன்பு கொள்ளும் தன்மையினைச் சிறப்பாக எடுத்து விளக்குகிறார். அன்பு என்றும் சிவம் என்றும் வெவ்வேறாகப் பிரித்துக் கூறுவதைத் தவறு என்கிறார். இரண்டும் ஒன்றேயென வலியுறுத்துகிறார். அன்பு தான் கனிந்து பூரணம் பெற்றுச் சிவமாகிறது என்பதை மக்கள் அறியாமல் தடுமாறுகிறார்கள் என்று வருந்துகிறார். அறியமாட்டாமல் அலைகிறார்கள் என்பது முனிவரின் துயரம். அன்பு தான் சிவமாகிறது என்பதை அறிந்துவிட்டால் அந்த அன்பு வெள்ளத்திலேயே இதயம் திளைத்து சிவானந்தப் பேற்றினைப் பெறுவார்கள். அன்பு நிலைப்பட்டு வணங்குபவர்கள் பேரின்பத்தைப் பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை என்பதை உறுதியோடு உணர்த்துவதற்காக எதிர்காலத்தை இறந்த காலமாகப் பாடுகின்றார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

இறைவனுடைய அருளைப் பெற வேண்டும் என்பதற்காக அடியார்கள் விரதங்களை அனுஷ்டித்து நோன்பு இருக்கிறார்கள். உடம்பினை வருத்திப் பல்வேறு பக்திக் கைங்கரியங்களை வெளிப்படுத்துகிறார்கள். துறவுபூண்டு சரீரத்தை துன்புறுத்தி இந்திரியங்களை ஒடுக்கப் பார்க்கிறார்கள். கடுமையான தவங்களாலும் விரதங்களாலும் இந்த உடம்பை எவ்வளவு தூரம் வருத்தின போதிலும் அன்பினால் உருகி உள்ளம் குழைந்தால் அல்லாமல் இறைவனின் திருவருளைப் பெறமுடியாது. அன்பு ஒன்று தான் இறைவனை அடையும் மார்க்கம் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் வலியுறுத்துகிறது.

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி அகங் குழைவார்க்கன்றி
என்போன் மணியினை எய்தவொண்ணாதே.

(தொடரும்...

**உள்ளத்தோடு போராடுவதே உயர்ந்த போராட்டமாகும்.**

உ

# மனித ஆளுமையில் இசையின் பங்கு

செல்வி ச. சரவணமுத்து அவர்கள்

**ஆளுமை என்றால்....?**

மனிதனது வெளித்தோற்றந்தான் அவனது ஆளுமையா? அல்லது ஒருவனது பட்டம். பதவி, மதிப்பு, புகழ், செல்வம் போன்ற சிறப்புக்களோ அல்லது அவனது பழக்க வழக்கம், செயலாற்றல், உள்ளார்ந்த திறமைகளோ, அல்லது அவனது எண்ணங்கள், நம்பிக்கை, அபிப்பிராயங்களோ ஆளுமை எனப்படுகிறது? இல்லை.

மனித ஆளுமை உடல், மனம், அறிவு, ஆன்மா (அன்பு) என்னும் நான்கு பரிமாணங்களை உள்ளடக்கியது.

**முழுமையான ஆளுமை விருத்தி..........?**

ஒழுக்கத்தில் நிலைபெறும் நோக்கில் ஆளுமையின் மேற்கூறிய நான்கு பரிமாணங்களையும் ஒருசேர வளர்ப்பதற்கு ஒருவர் பூரண ஈடுபாட்டுடன் முயற்சி செய்யவேண்டும். இதுவே முழுமையான ஆளுமை விருத்தி எனப்படும்.

ஒரு மனிதன் தன்னை முழுமையான ஆளுமை விருத்தியுடையவனாகவும், இசையை இரசிப்பவனாகவும் இசையைப் பாடுபவனாகவும் இருக்கவேண்டும். இந்த மூன்றும் ஒரு மனிதனிடம் கட்டாயம் இருக்குமேயானால் அவன் முழுமையான ஆளுமை விருத்தியுடையவனாக இருக்க வழி அமையும். இத்துடன் இன்னும் சில வழிகளில் ஆளுமையை விருத்தியடையச் செய்யலாம்.

**மனித ஆளுமை......?**

சாதாரண பேச்சுவழக்கில் "இவர் ஆளுமையான ஒரு மனிதராகத் தென்படுகிறார்" என்று கதைப்பது வழக்கம். இந்த ஆளுமையை ஆங்கிலத்தில் PERSONALITY எனக் கூறுவர். சாதாரண Personality என்று கூறும்போது ஒருவனின் நடை, உடை, பாவனையைக் குறிப்பதாகப் பலர் கருதுகிறார்கள். இது தவறு ஆளுமையுடைய ஒருவருக்கு அந்த ஆளுமையை வழங்கிய அல்லது அந்த ஆளுமைக்குப் பொறுப்பான பல பண்புகளை நாம் மறந்து விடுகின்றோம். ஆளுமையை வளர்ப்பதற்கு ஒரு மனிதனுக்குச் சகல நற்பண்புகளும் அவரிடம் அமைந்து இருத்தல் இன்றியமை யாததாகும். இப்படியான சகல நற்பண்புகளும் ஆளுமை தோன்றுவதற்குக் கால்கோளாய் அமைகின்றன. இதனை உணர்ந்து கொண்ட மனிதன் தனது ஆளுமையை விருத்திசெய்து கொள்ளக்கூடிய செயல்களிலே தன்னை முழுமையாகவும், முழுமனத்தோடும் ஈடுபடுத்திக் கொண்டு செயற்படுவதில் தங்கியுள்ளது.

அத்துடன் ஆளுமையை வளர்த்துக் கொள்ள விரும்பும் ஒருவர், பின்வரும் முக்கிய பண்புகளை அவர் மேலும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

மனித ஆளுமை வளர்ப்பதற்கான முக்கிய சில பண்புகளாவன.

INITIATIVENESS (துணிவு):- தைரியமாக ஒரு காரியத்தை ஆரம்பித்து நடத்தக்கூடிய

இயல்பு.

LOYALTY:- நம்பிக்கைக்குப் பொறுப்பானவராக இருத்தல்.

COURAGE ANDCOMMITMENT (துணிவுடனான பொறுப்பு) :- துணிவுடன் தான் பொறுப்பேற்ற விடயத்தைச் சிரத்தையுடன் நடாத்தி முடிக்கும் பண்பு.

ACCOUNTABILITY (பொறுப்புள்ள) :- தான் செய்துமுடித்த காரியத்தின் விளைவுகளுக்குப் பொறுப்பாக இயங்கும் பண்பு.

RESPONSIBILITY (நம்பத்தகுந்த) :- தான் பொறுப்பெடுத்த வேலையைப் பொறுப் புணர்ச்சியோடு செயற்படுத்துதல்.

இவையே அப்பண்புகளாகும். இவ்வாறான பண்புடைய மனிதரிடையில் ஆளுமை யானது விருத்தி அடைந்துள்ளது என்று நாம் கூறலாம். இதனுடன் இசையாற்றலும் ஒரு மனிதனிடம் காணப்படுமாயின் அது அவன் ஆளுமையை வளர்ப்பதற்கு ஊன்று கோலாக அமையும்.

## மனித ஆளுமையை வளர்ப்பதற்கான வழிகள்

மேலே இனங்காணப்பட்ட சகல பண்பு களும் அடங்கிய சிறப்பான ஆளுமை யுடைய கல்வி அதிபர்களை, அரச ஊழி யர்களை, ஆசிரியர்களை, திணைக்களத் தலைவர்களை நாம் அடிக்கடி நினைவு கூர்வதும், அவர்களைப்பற்றியும் அவர் களின் செயற்திறன் பற்றியும் கதைப்பதும் வழக்கமாகும். இப்படி நினைவு கூர்ந்து கதைக்கும் போது தற்பொழுது இத்தகைய ஆளுமையுடையவர்களை நாம் மிகக் குறைவாகவே காண்கிறோம் என்பதும் ஒரு பொதுவான அபிப்பிராயம். இன்றைய இளைய சந்ததியினர் சிறப்பான தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கு இத்தகைய ஓர் ஆளுமை வளர்ச்சி மிக அவசிய மானதாகும்.

ஆளுமை விருத்தியைச் சிறு பராயத்திலிருந்தே வளர்த்தெடுப்பதுதான் சரியான அணுகுமுறை இதற்குப் பெற் றோரும், பாடசாலைகளும், கல்வி நிலை யங்களும், சூழலும் சிறப்பாகப் பங்காற்ற முடியும். பெற்றோர்கள் தம்பிள்ளைகளைப் பல துறைகளிலும் ஈடுபடச்செய்தல் அவசி யம். விளையாட்டு, சமய நிகழ்வுகளில் பேச்சு, கவிதை, பாட்டு முதலியவற்றிலும், சங்கீதம் போன்ற துறைகளிலும் சமூக சேவைகளிலும் அவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

இதனைவிடக் கல்லூரிகளும் கல்விசார் நிறுவனங்களும் மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதில் அர்த்தமான பங்களிப்பைச் செய்யமுடியும். ஆரம்பப் பாடசாலைகளும், கல்லூரிகளும் ஆளுமை வளர்ச்சிக்கான தனியான திட்டம் ஒன்று வகுப்பது அவசியம். இத்திட்டத்தில் வினைத்திறனான ஆங் கிலக் கல்வியுடன் கணனி அறிவை வழங்குதல் மற்றும் ஆளுமைவிருத்தியை வழங்கக்கூடிய பிற நிகழ்வுகளையும் வழங்கவேண்டும். ஆளுமை விருத்தியை வழங்கக்கூடிய பிறநிகழ்வுகளான விளை யாட்டு, மொழித்திறன், தனி இசைப்போட்டி, பண்ணிசைப்போட்டி, பட்டிமன்றம், பேச்சுப் போட்டி, சமூகசேவை போன்றவற்றிலும்

மாணவர்களை ஈடுபடுத்தக்கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி வழங்குதல் இன்றியமையாதது. இத்தகைய செயற்பாடுகளினூடாக ஒரு மாணவன் தான் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறமுன்பே கணிசமான ஆளுமையை விருத்திசெய்து கொள்ளமுடியும்.

எனவே, பல்கலைக்கழகக் கல்வியை முடித்த எமக்கும் கூட வேலை கிடைக்கவில்லையே என ஏக்கத்துடன் கேட்கும் இளைஞர்களும் யுவதிகளும் தாங்கள் ஒரு சிறப்பான தொழிலைப் பெறுவதற்கு ஏற்ற ஆளுமையுடையவர்களாகத் தங்களை மாற்றியுள்ளார்களா? என்பதே முக்கிய கேள்வியாகும்.

எதிர்காலத்தில் சகல வேலை வாய்ப்புக்களும் தனியார் துறையிடம் மாறி வருவதை அடுத்துத் தனியார் நிறுவனங்கள் (Privote Sectors) சிறந்த சேவையுடன் கூடிய அதிகலாபத்தை நோக்கமாகக் கொண்டவை இத்துறையில் வேலை வழங்கும் அவர்கள் ஆளுமை உடையவர்களாக இருக்க வேண்டும் எனத் தனியார் துறை நிர்வாகிகள் எதிர்பார்க்கிறார்கள்.

இதனை உணர்ந்து நாம் ஆளுமையை வளர்த்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

ஆளுமையில் சங்கீதம் இசையின் பாங்கு என்பதனை நோக்குவோமானால் உலகம் எப்போது தோன்றியதோ அப்போதே சங்கீதம் தோன்றியது உலகில் உள்ள கலைகளுள் ஓர்பிரிவு சங்கீதம் ஆகும். இது இசை என்று அழைக்கப்படுகிறது உலகில் மக்கள் யாவரும் இன்புற்றிருக்கவும் வாழவும் பண்பாக அமையவும் கலைகள் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைகின்றன. இவற்றுள் சங்கீதமானது ஓர் அதி சிறந்த பிரிவாகத் திகழ்கிறது. சங்கீத இசையானது கீதம், வாத்தியம், நிருத்தியம் என மூன்று பிரிவுகளாகக் கையாளப்படுகிறது. இது வேதசுலோகங்களில் "கீதம் வாத்யஷ்ச நிர்த்தியம்ச திரயம் சங்கீதம் உதியதே" என்று கூறப்படுகிறது.

அதாவது கீதம் என்பது வாய்ப்பாட்டு எனப்படும்மிடற் இசையினையும் வாத்தியம் என்பது இசைக்கருவிகளிலிருந்து எழுப்பப்படும் கருவி இசையினையும், நிருத்தியம் என்பது நடன அபிநயங்கள் மூலம் காண்பிக்கப்படும் நாட்டிய இசையினையும் குறிக்கின்றன.

இசையானது ஓம் என்னும் ஒலியின் பிரதிபலிப்பாகவே அமைகின்றது. சங்கீதத்திற்கு அடிப்படை ஓங்காரமே யாகும். இதன் தொடர்பினாலும் இசையினாலும் வெளிப்பட்டு வந்தவையே சப்தஸ்வரங்களாகும். உலகிலுள்ள ஜீவராசிகளை, குறிப்பாக மக்கள் இறைவனுடன் இணைப்பதற்கு முதற்படியான இசைவுபட வாழ்தல் இசைந்து வாழ்தல் ஆகிய தன்மையை உருவாக்கி ஆன்ம ஈடேற்றத்தைத் தருவதே இசையின் முக்கிய நோக்கமாகும். இறைவனுக்கு இசை மிகப்பிரியமானது. இதனால் இறைவனுக்கு இசைப்பிரியன், இசைவடிவினன், ஓங்காரரூபன், நாதரூபன், சாமகானப்பிரியன் என்னும் சிறப்பு நாமங்கள் உண்டு. இறைவன் இசை வடிவினன் என்பதை "ஏழிசையாய் இசைப் பயனாய்.." என்னும் தேவாரத்தில் சுந்தரமூர்த்திசுவாமிகளும் "ஓசைஒலியெலாம் ஆனாய்" என அப்பர் சுவாமிகளும் "நாத விந்து கலாதிநமோ நம..." என அருணகிரிநாத சுவாமிகளும் பாடியுள்ளார்கள். இவ் இசைக்கு காந்தர்வவேதம் என்ற சிறப்பு

உண்டு.

இறைவனுக்கு மனிதன் ஆத்மீக உணர்வுகளை அர்ப்பணிக்கும் செயலாக உருவாகிய இவ் இசையானது நாடுகளுக்கு ஏற்றவாறு தேவைகளுக்கேற்பப் பல வகையான இசைப்பிரிவுகளைக் கொண்டுள்ளது. உதாரணமாக கர்நாடக இசை, பண்ணிசை, மேலைத்தேசஇசை, ஹிந்துஸ்தானி இசை, கீழைத்தேச இசை, பாமரஇசை என்பவை குறிப்பிடப்பட வேண்டியவைகளாகும்.

இதுவரை உளவியலில் நிகழ்த்தப் பெற்ற ஆய்வுகள் மனித நடத்தைக் கோலங்களையும் அதற்கு அனுசரணையாக அமையும் உள்ளத்தின் தொழிற்பாடுகளையுமே பெருமளவு நோக்கி வந்துள்ளன. அதனை மேலும் விரிவுபடுத்த வேண்டியுள்ளது. மனிதனது தொழிற்பாடுகளுக்குரிய சமூகத் தொடர்புகள் ஆராயப்பட வேண்டியுள்ளன. உற்பத்தி உறவுகளுடன் மனிதன் கொண்ட தொடர்பு உற்பத்தி, வலுக்களுடன் அவன் கொண்ட உறவு என்பவை ஆராயப்பட வேண்டியுள்ளன. "பாரம்பரியம்", "சூழல்" என்ற மரபு முறையான ஆய்வுத் தடங்களிலிருந்து உளவியல் வெளிவரவேண்டியுள்ளது.

இவ்வாறான பின்னணியில் மனித ஊக்கலை விளக்க வந்த பிராய்டிசமும், வரலாற்றுப் பொருள் முதல் வாதமும் மிக இலாவகமாக ஒன்றினைக்கப்படலாம் என நவபிராய்டியர் கூறுவர்.

உடைந்த மனித உள்ளங்களை முழுமையான மனித உள்ளங்களாக மாற்றுகின்ற சர்வாம்சம் பொருந்திய வழிகளை உளவியலாளன் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்தப்பணி பொருள் உற்பத்தி பண்புகளால் மட்டுமன்றி அரசியல், உளவியல், இசையியல் ஆகியவற்றால் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளது.

இசையும் உளவியலும் பல்வேறு பண்புகளுடன் இணைந்த தொடர்புறும் பொருள்கள், முழுமை பொருந்திய மனித ஆளுமை அமைத்து, பண்புகளாலும் பூரணமாக்கப்பட்ட தொடர்புகளால் உறுதி செய்யப்பட வேண்டியுள்ளது. சுரண்டல் அற்ற தொடர்புகளின் வழியாகவே மனிதனுடைய தனித்துவமும் கலையாக்கங்களின் தனித்துவமும் மேலோங்கமுடியும்.

சமூக அவலங்கள் தனிமனிதன் மீது நேரடியாகத் தெரிந்து நிற்கும் சமூகக்கொடுமைகளின் குறிகாட்டியாகத் தனிமனிதன் துலங்குவான். இந்நிலையில் தனிமனிதனே உடனடி நோக்கற் பொருளாக அமைதல் வியப்பன்று. ஆனால், உளப்பகுப்பு வாதம், நடத்தை வாதம், போன்றவை தனிமனித ஆய்வுகளோடு தமது பணியினை நிறுத்திக் கொண்டமை, அவ்வாதங்களின் எல்லைகளைக் கட்டுப்படுத்தி விட்டன என்பதனைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

மனிதன் தொடர்பான மர்மங்களும் இரகஷியங்களும் உளவியல் எல்லைகளினால் கட்டுப்பட்டிருக்கவில்லை. அதாவது உளவியல் நிச்சயவாதம் என்பது இறைமை கொண்ட செயலன்று. வரலாற்றுப் பொருள் முதல்வாத ஆதாரத்தின் மீது கட்டியெழுப்பப்படும் பொழுது மட்டுமே மனித உடைமையும், முழுமையும், ஆளுமையையும், ஆளுமைப் பொலிவையும், துலக்கும் இயலாக உளவியல் பரிணமிக்கமுடியும்.

(தொடரும்...

# அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர்...

*செல்வி தி. வரதவாணி அவர்கள்*

செவ்வி கண்டவர் - தி. வரதவாணி (BA. Hons)
செவ்வி கொடுத்தவர் - திரு ஐ. கோ. சந்திரசேகரம் J.P (Deputy chief marshal)

"சொல்வளம் பெருகு நும் துணையடிக் காக்கினேன்
சுவைத் தோதும் அன்பரெல்லாம்
சுகம்கவ்வி சந்தானம் மனையின்பம் மிக வாழத்
துணைதந்து காத்தருள்கவே"

என்று தம் அடியார் நலன்வேண்டும்.

**வினா:-** அருட்கவி விநாசித்தம்பிஐயாவின் ஞானஒளியால் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் அவர்க்குண்டு. அந்தவகையில் ஒருவராக ஐயாவினைமானசீக குருவாக கொண்டுள்ள நீங்கள் எப்பொழுது அருட்கவி ஐயாவினது அருட்திறத்தை நினைந்து வியந்திருக்கிறீர்கள்?

**விடை:-** கனவில் வந்தவரே என்கண்முன் காட்சி காட்டிய ஆச்சரியத்துடன் அவரது உச்சமான ஞான வரம்பை நான் கண்டது நீங்கள் வினவியது மாதிரி ஒரு கட்டத்தில் அது என்னவெனில், ஐயா ஆட்கொண்டதன்பின்னர் நாகவரத நாராயணர் தேவஸ்தானத்துக்கு (ஐயாவின் ஆலயம்) பூசைக்குச் செல்வேன். ஒருநாள் காலைப் பூசைக்குச் சென்ற எனக்கு அருட்கவி ஐயா அவர்கள் பூசை செய்யும் பேற்றைக் காணும் வாய்ப்புக்கிட்டியது. அப்பூசையை முடித்த ஐயா என்னைக்கூப்பிட்டு "நீர் சிறுவயது முதல் வணங்கிய குலதெய்வம் காளி அம்பாளிற்கு ஒரு விளக்கு ஏற்றி வழிபாடு செய்யும் உம்முடைய குலம் விளங்கும்" என்றார்.

அதன் பிரகாரம் ஐயாஅவர்கள் கூறியபடி தீவுப்பகுதி சரவணையில் அமைந்துள்ள எனது குலதெய்வம் காளிகோயில் சென்றேன். கிட்டத்தட்ட 12வருடங்களுக்கு முன்னர் இடப்பெயர்வுகள் நிகழ்ந்த காலம் ஆலயம் பூசைகள் விளக்குகள் ஏற்ற ஒருவரும் இன்றி பார்ப்பதற்கே கட்டிடங்கள் சீரழிந்து கவலைக்கிடமாய் இருந்தது. நான் சென்றநாள் பங்குனி உத்தரம். குலதெய்வமாகிய அருள் வரதகாளி அம்மனுக்கு ஓர் விளக்கு ஏற்றினேன்.

அருட்கவி ஐயாவிடம் ஆலயநிலையை எடுத்துக்கூறினேன் உடனே ஆலயம் அமையவேண்டிய இடம் அளவுப்பரிமாணம் அன்னையை வைக்க வேண்டிய இடம் என எல்லாவற்றையும் வரைபடம் போல் கூறி ஆலயக்கட்டிடவேலையை ஆரம்பிக்கும் படியும் கூறினார். ஆலயம் அவர் கூறியபடியே அமையப்பெற்று கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெற்றது. அவ்வாலயமே தற்போது பிரபல்யமாக உள்ள சரவணை மேற்கு அருள்மிகு ஸ்ரீவரதகாளி அம்பாள் ஆலயம். இந்து சமயத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. வெப்சைற்றில்கூட இவ்வாலய வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாலயம் மீது போற்றி அகவல் ஊஞ்சல் போன்ற பல பாடல்களை ஐயா அவர்கள் ஸ்ரீவரதகாளி அம்பாள் மீது பாடியுள்ளார். இங்கு யான் கூறவிழைவதும் ஐயாவின் ஞானத்தன்மை என்னவெனில் ஐயா அவர்கள் அக்கோயில் இருக்கும் இடத்துக்கு வரவேயில்லை. அவ்வாறு பார்க்காத ஒருகோயிலை எத்தகைய ஞானம் இருந்தால் தன் ஞானக் கண்ணால் பார்த்து ஆலயக்கட்டிட இட அளவையும் அத்தேவியின் அருமைபெருமைகளை நூல்வடிவிலும் எமக்கு அளித்து இருக்கிறார். இவ்வாறு அவர் அருட்திறம் சொல்லிலடங்கா.

**வினா:-** அருட்கவிஐயாவின் அன்புப்பிரவாகம் உங்கள் மீது எவ்வாறு இருந்தது?

**விடை:-** ஐயா 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வில் சாவகச்சேரி வீரபத்திரர் ஆலயத்திற்கருகில் இருந்தார். எனது வீடும் 500M தூரத்தில் இருந்தது. முன்பு கனவில் வந்து அடித்து எழுப்பிய ஐயா இப்போது அருகில் இருப்பதை எண்ணி திருவருளின் மகிமையைப் போற்றினேன். அச்சமயம் ஐயா அவர்களால் எழுதப்பட்ட நாராயணா் கவசம், மனோன்மணி கவசம் என்னும் நூல்வெளியீடானது வீரபத்திரர் ஆலயத்தில் வெளியிடப்பட்டபோது அவ்விழாவின் நூல் வெளியீட்டுச் சபையின் தலைவராக ஐயாவும், செயலாளராக நானும் நின்று செயற்பட்டோம். இது எனக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு.

**வினா:-** மகாகவிக்குப்பின் மக்கள் நாவில் அடிக்கடி உச்சரிக்கும் திருநாமம் அருட்கவி என்று நா.வி.மு. நவரத்தினம் (இசைப்பீடத்தலைவர், யாழ் பல்கலைக்கழகம்) அவர்கள் அருள் ஒளிக்கீர்த்தனைகள் என்றும் விநாசித்தம்பி ஐயாவின் நூலில் குறிப்பிட்டுள்ளார். கவியின் உறைவிடமான அருட்கவி விநாசித்தம்பி ஐயாவின் இலக்கியங்கள் என்ற வகையில் நீங்கள் கூறவிளைவது என்ன?

**விடை:-** கவிக்கோர் அருட்கவி மட்டுமல்ல உரைநடை என எந்தவகை இலக்கியங்களாயினும் அவர் உச்ச இடம் பெற்றவரே. வசனம் உரை இரண்டையும் கலந்து வசனநடை எனும் தனித்தமிழ் இலக்கியத்தை உருவாக்கிய வள்ளல்.

இந்தப் பெரிய மகானுக்கு ஏதும் கைமாறு யான் செய்யவேண்டும் என எண்ணியவேளை ஐயா வெளியிட்ட நூல்கள் அவற்றின் அருமைபெருமைகளை தொகுத்து யாழ் பல்கலைக்கழகத்துக்குச் சமா்ப்பித்தேன். அதை உற்று நோக்கிய யாழ் பல்கலைச் சமூகம் அருட்கவிஐயா அவர்களது கந்தபுராண வசனகாவியம் என்னும் புத்தாக்க நூலினை ஆராய்ந்து அதன் இலக்கியச் செழுமையையும் சமய விழுமியத்தையும் ஒன்றிணைத்துப் பார்த்து ஐயாவுக்கு 06.10.2001 அன்று முதுகலைமாணிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இது எனது ஐயாவின் இலக்கியத் திறத்தை வெளிக்காட்டுவதுடன் என்னால் முடிந்த தொண்டையும் ஐயாவுக்கு செய்த திருப்தி.

**வினா:-** அருளுரு அருட்கவிஐயா் இன்று சமாதியடைந்தும் தம் அன்பர்க்கு அருள் வழங்கிக்கொண்டே இருக்கிறார். ஐயா சமாதி அடைந்தமை பற்றி நீங்கள் யாது கூறுகிறீர்கள்?

**விடை:-** ஐயாவுடன் அன்று தொடக்கம் சமாதியடையும் வரைமட்டுமல்ல இன்று வரையும் தொடர்புகள் மிகநெருக்கமாகவே இருக்கிறது. தனது மானசீககுரு சிவத்திரு

கிருபானந்தவாரியார் எனவும் பாடலில் பித்துக்குளி முருகதாஸ்குரு எனவும் அருட்கவிஐயா கூறுவார். ஆனால் என்மானசிககுரு அருட்கவி விநாசித்தம்பி மகானேயாகும்.

முன்பு ஓர் சனிக்கிழமை எனது கனவில் வந்த மானசீககுரு அருட்கவிஐயா அவர்களை நினைந்து தற்போது ஒவ்வோர் சனிக்கிழமை பி.ப 4.30 - 5.30 மணிவரை யாழ் வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜபெருமான் ஆலயத்தில் நாராயணன் அருட்புகழ்மாலை, மனோன்மணியின் அருட்புகழ்மாலை எனும் ஐயாவின் நூல்களை பஜனையாகப்பாடுவேன். இப்பஜனையில் பல அடியார்கள் கலந்து கொள்வார்கள்.

சந்நிதியான் ஞானச்சுடரிலும் ஐயாவால் மாதாந்த சஞ்சிகைக்கு கட்டுரை எழுதும் பாக்கியம் கிட்டியது. அவர் அருளால் சமயசமூகப் பணிசெய்ய சமாதியில் இருந்து எனக்கு அருள் ஒளி வழங்குவார் என்பதில் ஐயமில்லை.

"சிவனவன் என்சிந்தையுள் நின்றதனால்,
அவனருளாலே அவன்தாள் வணங்கி
ஐயா எனஓங்கி நின்ற நுண்ணியனை.
போற்றி வணங்குவோம்"

இத்துடன் எனது செவ்வியைப் பூர்த்தி செய்கிறேன்.

(தொடரும்..

---

நம் குடும்பத்தில் ஒரு பெண்ணுக்குத் திருமணம் என்றால் பெண்ணின் தாய், தந்தையர் எவ்வளவு கஷ்டப்பட்டு அதை நடாத்தி முடிக்கப் பாடுபடுகின்றார்கள். மற்றவர்களுக்கு அவ்விருவரும் மிகவும் கஷ்டப்படுகிறார்களே என்று தான் தோன்றும். ஆனால் அத் தாய், தந்தையர்க்குத் தங்கள் பெண்ணின் திருமணம் நடந்த பெருமிதம் சந்தோஷம் தான் நிலைக்குமே தவிரத் தம் கஷ்டங்களை உணர மாட்டார்கள்.

அதுபோலவே அரிச்சந்திரனும் தான் கொண்ட வாழ்க்கையின் இலட்சியத்தை விரதமாய் மேற்கொண்டு இடையே எதிர்ப்பட்ட இடர்ப்பாடுகளைப் பற்றிய கவலையில்லாமல் வாழ்ந்தான் மற்றவர்க்குத்தான் அவன் மிகவும் கஷ்டப்பட்டதாகத் தோன்றுமே தவிர ஒவ்வொரு சோதனையிலும், தன் இலட்சியத்தில் வெற்றி பெறுவது குறித்துச் சந்தோஷம்தான் அடைந்திருக்கின்றான். இறுதியில் இறைவனின் அனுக்கிரகத்தைப் பெற்றான். ஆகையால் உண்மை பேசியதால் அரிச்சந்திரன் சந்தோஷம் அடைந்தானே தவிரக் கஷ்டம் அனுபவிக்கவில்லை.

---

## மௌனத்தின் அருமை

ஒரு சமயம் முனிவர்கள் மூவர் முத்தியடையும் வழியில் மேலே சென்றார்கள். வழியில் ஒரு பருந்து பெரிய பாம்பைத் தூக்கியவாறு பறந்து போனது அதைக் கண்ட தும் ஒருவர் பாம்பின் மீது இரங்கிப் பருந்து ஒரு பாபி எனக்கூறினார் அதற்கு மேல் அவரால் போக முடியவில்லை. அவர் பூமியை நோக்கி இறங்க வேண்டியவரானார். மற்றைய முனிவர் இந்தப் பாம்புக்கு நல்ல தண்டனை என்றார். உடனே அவரம் கீழே இறங்கினார். மூன்றாமவர் எல்லாம் இறைவன் செயல் என்று கருதியவாறு மேலே சென்றார்.

உ

# சந்நிதியான்

*திரு ந. அரியரத்தினம் அவர்கள்*



ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தை தரிசிக்கவரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்காக முடிந்தளவு நிதியையோ பொருட்களையோ வழங்குமாறு வீடுவீடாகத்தண்டிக்கொண்டு சில அன்பர்கள் அராலியிலுள்ள திரு அம்பலவாணர் வேலுப்பிள்ளை அவர்களின் வீட்டிற்கு வருகை தந்தார்கள். இந்த அன்பர்கள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் அன்னதானம் வழங்குவதற்காக வீடு வீடாகச் சென்று பொருளையோ பணத்தையோ தண்டுவதற்கு வந்தவர்களாக இருந்தாலும் திரு வேலுப்பிள்ளை அவர்கள் அந்த அன்பர்களது வருகைக்கு மிகுந்த மரியாதை செலுத்தி பயபக்தியுடன் அவர்களுடன் கதைத்து முடிந்தளவு நிதியையும் வழங்கி அவர்களை உபசரித்து அனுப்பிவைத்தார்கள்.

தனது வீட்டிற்கு வந்த அன்பர்கள் தாங்களாக வரவில்லை. இவர்களை சந்நிதியான்தான் தன்னிடம் அனுப்பியுள்ளான் என தனது குடும்பத்தவர்களுக்கு எடுத்துக் கூறிய திரு வேலுப்பிள்ளை அவர்கள் தொடர்ந்து வந்த வெள்ளிக்கிழமை சந்நிதியானிடம் சென்று அவனை மனம் உருகி வழிபட்டு மனநிறைவுடன் வீடு திரும்பினார்கள். இவ்வாறு வீடு திரும்பிய திரு வேலுப்பிள்ளை அவர்கள் தன்னை சந்நிதி முருகன் அழைத்ததினால் தான் சந்நிதியானிடம் சென்று அவனை வழிபட்டு அளவில்லாத ஆனந்தமடைந்தது பற்றி தனது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் வெளிப்படுத்தியதுடன் சந்நிதிமுருகனது பெருமைகளையும் சிறப்புக்களையும் அவர்களுக்கு விளக்கமாகவும் எடுத்துக் கூறினார்கள்.

இந்தநிகழ்வு 1965ஆம் ஆண்டளவில் இடம்பெற்ற ஒரு நிகழ்வாகும். அடியார்களுக்கு மதிப்பளித்தல் எந்த செயற்பாட்டையும் இறைவனது செயற்பாடாகக் கருதுதல் எந்தக் காரியத்தையும் இறைவனை முன்னிலைப்படுத்தி ஆரம்பித்தல் போன்ற ஆழமான ஆன்மீக அம்சங்களைக் கடைப்பிடிக்கின்ற சில அன்பர்களிடம் சராசரி மனிதர்களிடம் வெளிப்படாத இறையம்சங்கள் பல வெளிப்படுவதை நாம் காணமுடியும். திரு வேலுப்பிள்ளை அவர்களும் இவ்வாறான இயல்புள்ள ஒருவராக விளங்கியுள்ளதை அவரது வாழ்க்கைப் பயணத்திலிருந்து நாம் அறியமுடிகிறது.

திரு வேலுப்பிள்ளை அவர்களது மகன் அருணகிரிநாதன் அவர்கள் பட்டதாரி

யாக கல்வி கற்றுக்கொண்டிருந்தார்கள். இவர் தனது இறுதியாண்டுப் பரீட்சைக்குத் தோற்றிய பொழுது திறமையிருந்த நிலையிலும் திருப்தியாக விடையளிக்க முடியாது போய்விட்டது. இதனால் பரீட்சையில் தான் சித்தியடைய முடியாது என்பது இவருக்கு நன்கு தெரிந்துவிட்டதால் மிகவும் மனமுடைந்து காணப்பட்டார்கள். ஆனாலும் இதனை குடும்பத்தில் உள்ள எவருக்கும் வெளிப்படுத்தவில்லை. அதனை அவர்கள் உணரும் வண்ணம் நடந்து கொள்ளவுமில்லை. ஆனால் திரு அருணகிரிநாதரின் தந்தையான திரு வேலுப்பிள்ளை அவர்கள் தனது மனைவியிடம் அருணகிரியை கவலைப்பட வேண்டாம் என்று கூறும்படியும் அவன் அடுத்த வருடம் பரீட்சையில் சித்தியடைவான் என்று தெரிவிக்கும்படியும் எடுத்துக்கூறினார்கள் இவ்வாறான ஒரு தகவலை தனது தாயின் ஊடாகத் தெரிந்துகொண்ட அருணகிரிநாதன் அவர்கள் தனது உள்ளக்கிடக்கைகளையும்தான் பரீட்சையில் சரியாகச் செயற்படாத நிலையையும் அச்சொட்டாகத் தெரிவித்த தனது தந்தையின் அருள் நிலையை அறிந்து வியப்படைந்தார்கள்.

இதே போன்று திரு வேலுப்பிள்ளை அவர்கள் ஒருமுறை தனது பிள்ளைகளுடன் ஆடிஅமாவாசை தினத்தன்று கீரிமலையிலிருந்து பஸ்சில் வீடு திரும்புவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிறுபிள்ளையான அவரது மகன் பஸ்சிக்குள் முன்னுக்குப்போக தாமதித்ததால் அந்த பஸ் வண்டியின் நடத்துனர் கோபமடைந்தவராக அவனை சிறுவன் என்றும் பார்க்காது அவன் மீது சிறிதும் ஈவிரக்கமும் காட்டாது அவனை தனது கைகளாற் பலமாகத் தள்ளிவிட்ட கசப்பான ஒரு நிகழ்வு இடம் பெற்றது. இவ்வாறு நடந்துகொண்ட அந்த பஸ் நடத்தினருடைய செயற்பாட்டை அவதானித்த பஸ் பிரயாணிகள் அனைவரும் மிகுந்த வேதனையும் வெறுப்பும் அடைந்தனர். திரு வேலுப்பிள்ளை அவர்களும் தனது மகனை தனது கண் எதிரிலேயே சிறுபிள்ளை என்றும் பாராது பஸ் நடத்துனர் மோசமாக நடந்துகொண்டதனால் மிகவும் வேதனையும் வெறுப்புமடைந்தார்கள். ஆனாலும் திரு வேலுப்பிள்ளை அவர்கள் அதனை பொறுமையுடன் தாங்கிக் கொண்டார்கள் மேலும் அந்த நடத்துனரை நோக்கி "குழந்தைகளை நாங்கள் முருகனாக பாவனை செய்து அவர்கள் மீது அன்பும் அரவணைப்பும் செலுத்தி வழிப்படுத்த வேண்டும்" என்று அன்பாகவும் அடக்கமாகவும் எடுத்துக்கூறினார்கள். ஆம் அந்த பஸ் நடத்தினருடைய உணர்வுகளுக்கும் வெளிப்பாடுகளுக்கும் முற்றிலும் வித்தியாசமான முறையில் இந்தப் பெரியவர் சாந்தமாக நடந்துகொண்டமை அங்கே இருந்த அனைவருக்கும் ஆச்சரியமளிப்பதாக இருந்தது.

திரு வேலுப்பிள்ளை அவர்களின் மகனான திரு அருணகிரிநாதன் அவர்கள் அவரது தந்தை குறிப்பிட்டதுபோல பட்டப்படிப்பின் இறுதிப்பரீட்சைக்கு இரண்டாவது தடவையாக தோற்றி அதில் சித்தியடைந்தார்கள். தற்பொழுது இவர் வவுனியாவில் சிரேஸ்ட சட்டத்தரணியாகவும் பதில் நீதிபதியாகவும் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். திரு அருணகிரிநாதன் அவர்களும் தந்தையைப் போல இறைநம்பிக்கையும் தூய்மையான இறைவழிபாடும்

மிகவும் பலவீனமுள்ளவன் முற்கோபக்காரன்.

மேற்கொண்டுவருகின்ற ஒருவர். மேலும் இவர் விசுவாசமாக இறைதொண்டினை மேற்கொண்டு வருவதுடன் பல அற்புத நிகழ்வுகளை அனுபவித்துக்கொண்டிருக் கிற ஒருவராகவும் காணப்படுகின்றார்கள்.

சிரேஸ்ட சட்டத்தரணியாகவும் அதேநேரம் தொழில் நேர்மையாகவும் செயற்படுகின்ற திரு அருணகிரிநாதன் அவர்களின் சந்நிதி தொடர்பாக இடம் பெற்ற ஒரு அற்புத நிகழ்வினை இங்கே அடியார்களுக்கு வெளிப்படுத்துகின்றோம். இவர் 1990ஆம் ஆண்டு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு பஸ்சில் பிரயாணம் செய்து சந்நிதியானை வழிபாடு செய்தார்கள். ஆலயத்திற்குள் ஆசார முறைப்படி செல்ல வேண்டுமென்பதால் மேல் அங்கியை கழட்டி வேட்டியுடன் ஆலயத்திற்குள் சென்று பூசையிலும் பங்குபற்றி வீதி வலம் வந்து சந்நிதியானை உள்ளம் உருகி வழிபாடு செய்தார்கள். இவ்வாறு உடலா லும் உள்ளத்தாலும் தூய்மையான வழிபாட்டை மேற்கொண்ட அருணகிரி நாதன் அவர்களுக்கு வேறு எங்குமே ஏற் படமுடியாத ஒரு ஆன்மீக நிறைவு மனதில் ஏற்பட்டிருப்பதை உணர்ந்துகொண்டார்கள்.

வித்தியாசமான சூழலில் அதே நேரம் எளிமையாக அமைந்திருக்கின்ற சந்நிதி ஆலயத்தில் வழிபாட்டிற்காக ஒன்றுகூடுகின்ற அடியார்களின் இயல்பு களையும் அவர்கள் வழிபாடு செலுத்து கின்ற பாங்கினையும் நன்கு அவதானித்த திரு அருணகிரிநாதன் அவர்கள் அங்கே ஒரு வித்தியாசமான பக்தி உணர்வு வெளிப்படுவதை நேரடியாக உணர்ந்து கொண்டார்கள்.

இவ்வாறான உணர்வலைகளுடன் ஆலய தரிசனத்தை முடித்துக்கொண்ட திரு அருணகிரிநாதன் அவர்கள் தான் பஸ் வண்டியிலேயே ஆலயத்திற்கு வந் திருந்த நிலையில் மீண்டும் பஸ் வண்டி யின் மூலம் வீடு திரும்புவதற்கு ஆயத்த மானார்கள்.

இவ்வாறு பஸ்சில் பிரயாணம் செய்து வீடு திரும்ப ஆயத்தமான அந்த வேளையில்தான் தான் பஸ் பிரயாணத் திற்காக கொண்டு வந்த பணத்தை தனது வேட்டிமடிப்பில் அரையில் சொருகிவைத் திருந்தது அவருக்கு ஞாபகத்திற்கு வந் தது பதட்டத்துடன் அரையில் சொருகி யிருந்த பணத்தை கை விரல்களால் தடவிப் பார்த்தார்கள். சொருகிவைத்திருந்த பணம் எதுவும் அங்கே இருக்கவில்லை. ஆம் அவர் பூசையில் பங்குபற்றி வீதி வலம் வந்து ஆலயதரிசனத்தை மேற் கொண்ட வேளையில் அவர் அவ்வாறு வேட்டியில் பணத்தை சொருகி வைத்திருந் ததை முற்றாக மறந்திருந்தமையால் அவரை அறியாமலே அவரது பணம் முழு வதும் அங்கே விழுந்து தொலைந்து விட்டது என்பதை உணர்ந்துகொண்டார் கள்.

பணம் முழுவதும் தொலைந்து விட்டநிலையில் வீடு திரும்புவதற்கு பஸ்சிற்கு பணம் கொடுப்பது எப்படி என்று திரு அருணகிரிநாதன் அவர்கள் கலக்க மடைந்தார்கள்.

“நான் பிரயாணம் செய்வதற்கு கொண்டுவந்த பணம் தொலைந்துவிட்டது எனக்கு பணம் தாருங்கள்... என்று ஆலயத் தில் நின்று எவ்வாறு கேட்கமுடியும். அவ்வாறு முன்பு அறிமுகமில்லாதவர்களி டம் கேட்கும்போது அதனை அவர்கள் நம்புவார்களா? ஏமாற்றிப்பணம் வாங்கு வதற்காகத்தான் இவ்வாறு கேட்பதாக

அவர்கள் சந்தேகம் கொள்ளமாட்டார்களா?" என்று பலவிதமாக திரு அருணகிரிநாதன் அவர்கள் தனக்குள் சிந்திக்கத் தொடங்கினார்கள். உண்மையில் ஆலயத்தில் நின்று ஒருவர் அவ்வாறு கேட்கும் பொழுது மற்றவர்கள் அதனை சந்தேகிப்பது நியாயமானதே என தனக்குள் சிந்தித்த திரு அருணகிரிநாதன் அவர்கள் அவ்வாறு யாரிடமும் யாசித்து பணத்தைப் பெற்றுக்கொள்ளுவது முறையற்றது என முடிவுசெய்தார்கள்.

மேலும் அடியவர்களுக்கு வேண்டியவற்றை எல்லாம் வழங்குகின்ற கருணை உள்ளம் படைத்தவன் சந்நிதியான் என்ற நம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும் இங்கே வந்து மனமுருகி வழிபட்ட நிலையில் சந்நிதியான் தன்னை வீட்டிற்கே திரும்பிச்செல்லமுடியாத சங்கட நிலைக்கு ஆளாக்கி விட்டானே என திரு அருணகிரிநாதன் அவர்கள் கவலையடைந்தார்கள். மேலும் இயல்பாகவே யாரிடமும் எதனையும் இரந்துகேட்கும் இயல்பில்லாத எனக்கு இவ்வாறான ஒரு சங்கடமான நிலை ஏற்பட்டுவிட்டதே எனவும் கவலையடைந்தார்கள்.

இவ்வாறு தனக்கு ஏற்பட்ட சங்கட நிலையினால் பலவாறு ஆதங்கப்பட்டாலும் திரு அருணகிரிநாதனின் இவ்வாறான சிந்தனை நீண்டநேரம் நீடிக்கவில்லை. அவர் சிறிது நேரத்துக்குள்ளேயே தனது அறியாமையை நினைத்து மனம் வருந்தியதுடன் தன்னையே நொந்துகொண்டார்கள். ஆம்! நான் கவனமாக எனது பணத்தை பாதுகாக்காது கவனக்குறைவாக இருந்து பணத்தை தொலைத்துவிட்டு சந்நிதியானை நொந்துகொள்வதும் சந்நிதியான் மீது பழிசுமத்தலும் தவறு என்பதை உணர்ந்து தனது அறியாமைக்காக மனம் வருந்தினார்கள். மேலும் தனது தவறுக்காக தன்னை மன்னித்தருளுமாறு சந்நிதியானிடம் வேண்டுதலும் செய்தார்கள்.

ஆனாலும் திரு அருணகிரிநாதன் அவர்கள் அறிமுகமில்லாத எவரிடமும் பணத்தைப்பெற்றுக் கொள்வதில்லை என்பதில் உறுதியாக இருந்தார்கள். ஆலயத்தில் உரிமையுடன் பணத்தை கேட்டுப் பெற்றுக் கொள்ளக்கூடிய மிகவும் அறிமுகமானவர்களிடம் இருந்து மட்டுமே தனது பஸ் பிரயாணத்திற்கு பணத்தைப் பெற்றுக் கொள்ளுவதென்ற முடிவில் உறுதியாக இருந்தார்கள். ஆனாலும் நீண்ட நேரமாகியும் இவர் எதிர்பார்த்தது போல ஆலய சூழலில் அவ்வாறு அறிமுகமானவர்கள் எவரையும் இவரால் காணமுடியவில்லை.

திரு அருணகிரிநாதன் அவர்கள் மனம் தளரவில்லை. சந்நிதியான் கருணை உள்ளம் கொண்டவன் அடியவர்களின் வேண்டுதல்களை எல்லாம் நிறைவேற்றுகின்ற கண்கண்ட தெய்வம் என்பதை பல சந்தர்ப்பங்களில் தனது தந்தையார் பலருக்கு கூறியதை மனதில் ஆழமாகப் பதித்து வைத்திருந்தார்கள். மெய்யடியார்களின் அன்புக்கு கட்டுப்படுகின்ற சந்நிதி முருகன் தன்னை மட்டும் தவிக்கவிடுவானா? தான் வீடு செல்வதற்கு எப்படியும் அவர் வழிகாட்டத்தானே வேண்டும் என்ற நம்பிக்கை அவரை அறியாமலே அவருக்கு ஏற்படத்தொடங்கியது. இறுதியில் அந்த நம்பிக்கை ஒரு வைராக்கியமாகவே மாறிவிட்டது. இருந்தபோதும் இவருக்கு அறிமுகமான எவரையும் ஆலயச்சூழலில் நீண்டநேரமாக காணாதநிலையில் திரு அருணகிரிநாதன் அவர்கள் அங்கேயே தங்கியிருக்கலானார்கள்.

தான் நைவேத்தியமாகப்படைத்த பிரசாதங்களை மூலஸ்தானத்தில் முழு முதற் கடவுளாக வீற்றிருக்கும் பொல்லாப் பிள்ளையார் உட்கொள்ளாத நிலையில் அவை அப்படியே இருப்பதை அவ தானித்த சிறுவனான நம்பியாண்டார் நம்பி தனது பூசையில்தான் ஏதோ தவறு நேர்ந்து விட்டது என கலக்கமடைந்தார்கள். அது மட்டுமல்ல பூசையில் தவறுநேர்ந்ததால்த் தான் பிள்ளையார் நைவேத்தியத்தினை உட்கொள்ளவில்லை என எண்ணி தனது தலையை அந்த சிறுவன் அங்கே உள்ள சுவரில் மோதச் சென்றபொழுது சிறுவ னான நம்பியாண்டார் நம்பியின் வஞ்சகமில் லாத பக்தியை மெச்சி அந்த அமுதினை பிள்ளையார் உட்கொண்டதை எமது புராணம் எமக்கு எடுத்துக்கூறுகிறது.

இதேபோன்றுதான் இங்கேயும் சந்நிதியான் கருணை உள்ளம் கொண்ட கடவுள் என்று நம்பி தனது ஆலயத்திற்கு வருகை தந்து தன்னை உள்ளம் உருகி வழிபாடு செய்த திரு அருணகிரிநாதனின் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் மேலும் சோதிக்கவிரும்பாது சந்நிதியான் தனது கருணையை வெளிப்படுத்த சித்தம் கொண்டான்.

(திரு அருணகிரிநாதன் அவர் களுடன் மிகநெருக்கமாகப்பழகும்) ஆவரங்காலைச் சேர்ந்த திரு அருணா சலம் என்ற நண்பனை அங்கே ஆலயத் தில் சந்நிதியான் தோன்றச்செய்தான்.

ஆம்! ஆலயவழிபாட்டிற்காக தனது நண்பர்கள் சிலருடன் சந்நிதியானி டம் வந்திருந்த தனது நண்பனை அங்கே கண்ட அருணகிரிநாதன் அவர்களின் உள்ளம் அகமகிழ்ந்தது. உரிமையுடன் தனது நண்பனிடம் சென்று பஸ்சிற்குரிய பணத்தைப் பெற்றுக்கொண்ட திரு அருணகிரிநாதன் அவர்கள் சந்நிதியானது கருணை என்ற அந்த ஆனந்த வெள்ளத் தில் மிதந்தவாறே புதிய பக்தி அனுபவத் துடன் பஸ்சில் வீடு சென்றடைந்தார்கள்.

ஓம் முருகா!

---

தானங்களில் எல்லாம் சிறந்தது அன்னதானம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால் தானம் வாங்குகிறவனுக்குத் திருப்தி ஏற்படுத்தும் தானம் அது ஒன்று தான் எவ்வளவு பணம் கொடுத்தாலும், வஸ்திரதானம் செய்தாலும், பூதானம் கொடுத்தாலும், வாங்குகிறவன் போதுமென்று சொல்வது இல்லை. ஆனால் அன்னதானத்தில் எவ்வளவு சாப்பிடமுடியுமோ அவ்வளவு சாப்பிட்டு விட்டால் போதும் என்று சொல்லிவிடுவான். அதற்கு மேல் ஒரு கவளம் கொடுத்தாலும் வேண்டாமென்றே சொல்லுவான். இவ்விதம் போதுமென்று சொல்கிற வரையில் திருப்தி ஏற்படுத்தக்கூடிய தானம் அன்னதானம் ஒன்று தான்.

ஆனால் இந்தத்தானத்திலும் ஒருவேளை சாப்பிட்டபின் அப்பொழுது போதும் என்று சொன்னாலும் கூட அந்தத்திருப்பதி அப்பொழுது மாத்திரமே தவிர அடுத்த வேளையில் பசிவரும் போது மறுபடியும் அன்னத்தின் மீது நாட்டம் ஏற்படும். இந்நிலையை மாற்றமுடியாது.

உ

# பங்குனிமாத வாராந்த நிகழ்வுகள்

*02-03-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

**விடயம்:-** பஜனை

**வழங்குபவர்:-** வல்வை முத்துமாரியம்மன் பஜனைக் குழுவினர்

---

*09-03-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

**சொற்பொழிவு:-** அறம் செய்ய விரும்பு

**வழங்குபவர்:-** செல்வன் ஸ்ரீவித்தகன் விஜயரகுநாதன்

(யாழ் இந்துக் கல்லூரி)

---

*16-03-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

**சொற்பொழிவு:-** அன்பு வழி

**வழங்குபவர்:-** அழகு ஜெகதீஸ்வரதேசிகர்

(ஆசிரியர்)

---

*23-03-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

**சொற்பொழிவு:-** பெரியபுராணம் (தொடர்)

**வழங்குபவர்:-** அ. குமாரவேல் (சிரேஷ்ட விரிவுரையாளர்)

(யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

*30-03-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

## ஞானச்சுடர் 111ஆவது மாத வெளியீடு
## பங்குனி- 2007

**வெளியீட்டுரை:-** சைவப்புலவர் க. நித்தியதசிதரன்

**மதிப்பீட்டுரை:-** சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன்

(இந்துசமய ஆசிரிய ஆலோசகர் வலிகாமம்)

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2007

**ஜனவரி**
01.01.2007 மார்கழி 17 திங்கள்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
02.01.2007 மார்கழி 19 புதன்
திருவாதிரை விஷேட உற்சவம்
15.01.2007 தை 1 திங்கள்
தைப்பொங்கல்
27.01.2007 தை 13 சனி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**பெப்ரவரி**
01.02.2007 தை 18 வியாழன்
தைப்பூசம் விசேட உற்சவம்
16.02.2007 மாசி 4 வெள்ளி
மகாசிவராத்திரி விசேட உற்சவம்
23.02.2007 மாசி 11 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**மார்ச்**
05.03.2007 மாசி 19 சனி
மாசிமகம்
21.03.2007 பங்குனி 7 புதன்
ஆலய கும்பாபிஷேகதினம்
சகஸ்ரமகா சங்காபிஷேகம்
சண்முக அர்ச்சனை, விசேட உற்சவம்
23.03.2007 பங்குனி 9 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**ஏப்ரல்**
01.04.2007 பங்குனி 18 ஞாயிறு
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமான் கும்பாபிஷேகதினம்
14.04.2007 சித்திரை 1 சனி
மங்கள இந்துப் புதுவருடப் பிறப்பு
(சர்வமித்ரு) மாலை விசேட உற்சவம்
19.04.2007 சித்திரை 8 வியாழன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**மே**
02.05.2007 சித்திரை 19 புதன்
சித்திரா பூரணை விரதம்
12.05.2007 சித்திரை 29 சனி
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
காலை 10 மணி சங்காபிஷேகம்
காலை 11 மணி சண்முகார்ச்சனை
மதியம் 12 மணி விசேட உற்சவம்
15.05.2007 வைகாசி 2 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
30.05.2007 வைகாசி 18 புதன்
வைகாசி விசாகம் விசேட உற்சவம்

**ஜூன்**
13.06.2007 வைகாசி 30 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.06.2007 ஆனி 5 வெள்ளி
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
25.06.2007 ஆனி 11 திங்கள்
தீர்த்தமெடுப்பு

**ஜூலை**
02.07.2007 ஆனி 18 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
10.07.2007 ஆனி 26 செவ்வாய்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
15.07.2007 ஆனி 31 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூசை

**ஆகஸ்ட்**
06.08.2007 ஆடி 21 திங்கள்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
12.08.2007 ஆடி 27 ஞாயிறு
ஆடிஅமாவாசை விரதம்
13.08.2007 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
கொடியேற்றம் அதிகாலை 5.30
16.08.2007 ஆடி 31 வியாழன்
காலைத்திருவிழா ஆரம்பம்
21.08.2007 ஆவணி 4 செவ்வாய்
பூங்காவனம்
22.08.2007 ஆவணி 5 புதன்
கைலாய வாகனம்
26.08.2007 ஆவணி 9 ஞாயிறு
சப்பறம்
27.08.2007 ஆவணி 10 திங்கள்
காலை தேர்
28.08.2007 ஆவணி 11 செவ்வாய்
காலை தீர்த்தம்
மாலை மௌனத் திருவிழா

**செப்ரெம்பர்**
03.09.2007 ஆவணி 17 திங்கள்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
30.09.2007 புரட்டாதி 13 ஞாயிறு
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**அக்டோபர்**
11.10.2007 புரட்டாதி 24 வியாழன்
நவராத்திரி விரதாரம்பம்
20.10.2007 ஐப்பசி 3 சனி
சரஸ்வதி பூஜை
21.10.2007 ஐப்பசி 4 ஞாயிறு
விஜயதசமி
கேதாரகௌரி விரதாரம்பம்
27.10.2007 ஐப்பசி 10 சனி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**நவம்பர்**
06.11.2007 ஐப்பசி 22 வியாழன்
தீபாவளி
09.11.2007 ஐப்பசி 23 வெள்ளி
கேதாரகௌரி விரதம்
10.11.2007 ஐப்பசி 24 சனி
கந்தசஷ்டி விரதாரம்பம்
15.11.2007 ஐப்பசி 29 வியாழன்
கந்தசஷ்டி சூரன்போர்
16.11.2007 ஐப்பசி 30 வெள்ளி பாரணை
தெய்வானை அம்மன் திருக்கல்யாணம்
24.11.2007 கார்த்திகை 8 சனி
திருக்கார்த்திகை விரதம்
விசேட உற்சவம் குமாராலய தீபம்
25.11.2007 கார்த்திகை 9 ஞாயிறு
விநாயக விரதாரம்பம்
விஷ்ணு ஆலய தீபம்

**டிசம்பர்**
15.12.2007 கார்த்திகை 29 சனி
விநாயகர் சஷ்டி விரதம்
திருவெம்பாவை பூஜாரம்பம்
16.12.2007 கார்த்திகை 30 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை
21.12.2007 மார்கழி 5 வெள்ளி
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
24.12.2007 மார்கழி 8 திங்கள்
திருவாதிரை விசேட உற்சவம்

**சுபமங்களம்**
**நன்றி**